9

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1961
MADRAS

# இந்திய நாட்டு
# வீர நங்கை

95/1-61.

...ங்கர் & கம்பெனி., சென்னை-5.

TB
O-,6(6)
N60
148962

# இந்திய நாட்டு வீர நங்கை

## ஆரும் வகுப்பு

95 / 1 61.

பதிப்பாசிரியர் :
புு. மு. தேசிகன்

பிரசுரகர்த்தர் :
ராஜா ராம்சந்தர் & கம்பெனி,
520, திருவல்லிக்கேணி ஹைரோடு - சென்னை-5.

முதற் பதிப்பு—1960

உரிமை பிரசுரகர்த்தர்களுடையது.

[புதிய பாட இயலின்படி அமைக்கப்பெற்றது.]

24 இராத்தல் வெள்ளைத்தாள்
உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

விலை 65 ந.பை.

145962

TB
O-,6(6)
N60

ராஜா ராம்சந்தர் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5.

# முகவுரை

நம் நாட்டுச் சிறுர்களுக்கு வீர உணர்ச்சியும் தன்னலமற்ற தன்மையும் ஊட்ட இத்தகைய வீரச் செயல்கள் புரிந்தோரின் வாழ்க்கை வரலாறு பேருதவியாகும் என்று இச்சிறு நூல் வெளி வந்துள்ளது. இதனை அனைவரும் ஏற்று ஆதரிக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பதிப்பாளர்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பழந்தமிழ் வீரப் பெண்டிர் | ... 5 |
| 2. | இளமைப் பருவமும் இல்லற வாழ்க்கையும் | ... 17 |
| 3. | அரசியல் | ... 24 |
| 4. | சிப்பாய்க் கலகம் | ... 33 |
| 5. | ஜான்ஸியில் போர் | ... 39 |
| 6. | துணைவலியும் போரும் | ... 51 |
| 7. | தாந்தியா தோபியும் அரசியும் | ... 61 |
| 8. | அரசியின் வீர மறைவு | ... 66 |
| 9. | அரசியின் நல்லியல்புகள் | ... 75 |

# 1. பழந்தமிழ் வீரப் பெண்டிர்

பழங்காலத்தில் நமது இந்திய தேசம் வீரத்திற்கு மிகப் பெயர் பெற்றிருந்தது. வடநாட்டில் இராசபுத்திரர்களும், மராத்தியர்களும், சீக்கியர்களும், தென்னுட்டில் தமிழர்களும் செய்த வீரச் செயல்களை நாம் சரித்திரத்தின் வாயிலாக நன்கு அறிகின்றோம். இராசபுத்திரர்களுள் சிறப்புற்று விளங்கிய பிருதிவிராஜரையும், மராத்தியர்களுள் வீர சிங்கமாக விளங்கிய சிவாஜியையும் சீக்கியர்களில் ரஞ்சித்சிங்கையும் வடநாட்டார் புகழ்கின்றனர். நமது தமிழ் நாட்டில் கணக்கில்லாத வீரர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். சோழன் கரிகாலன், சேரன் செங்குட்டுவன் போன்ற அரசர்கள் இமயமலை வரையில் படையெடுத்துச் சென்று பல ஆரிய அரசர்களை வென்று, தமிழ்நாட்டின் சிறப்பு ஓங்குமாறு செய்தனர். பிற்காலத்தில் தேசிங்கு ராஜன் போன்ற சிற்றரசர்கள் காட்டிய வீரத்தை நாம் மிகப் பாராட்டுகின்றோம். சங்க காலத்து நூல்கள் தமிழர்களின் வீரத்தை நன்ருக எடுத்துக் கூறியுள்ளன.

பழந்தமிழ் நாட்டில் பெண்டிரும் ஆட வரைப் போலவே வீரம் மிகுந்து விளங்கினர் என்பதைச் சங்க நூல்களால் நாம் நன்கு அறியலாம். அவர்கள் வீரத்தாய்மார்கள் என்று அழைக்கப்பட்டனர். வீரத்தாய்மார்கள் போர்க்களத்தில் சென்று போர் செய்யவில்லை; வேலை வீசவில்லை; யானைமேலும் குதிரை மேலும் ஏறிப் போர்செய்யவுமில்லை. ஆனால் அவர்களை வீரத்தாய்மார்கள் என்று எங்ஙனம் அழைக்கலாம் என்ற ஐயம் பலருக்கு உண்டாகும். போர்க்களத்தில் பலரை வெட்டி வீழ்த்துவது ஒன்றுமட்டும் வீரம் அன்று. வீரவுணர்ச்சி மனத்தில் இருப்பதும் பிறருக்கு வீரத்தை மிகுதியாக ஊட்டுவதும் சிறந்த வீரம் ஆகும். தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கும், உடன் பிறந்தவர்களுக்கும், கணவன்மார்களுக்கும் வீர உணர்ச்சியை ஊட்டினர். இக்காரணத்தினாலேயே அவர்களுடைய வீரம் புகழப்பட்டுள்ளது. புறநானூறு போன்ற நூல்களில் வீரத் தாய்மார்களைப் பற்றிய பல செய்திகள் கூறப் பட்டுள்ளன. அவர்கள் 'மறக்குடி மகளிர்' என்றும் அழைக்கப்பட்டனர். அவர்கள் தம்முடைய வீரத்தை எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதையும், எவ்வாறு பிறருக்கு வீரத்தை ஊட்டினர் என்பதையும் பற்றிச்

சுவையுள்ள பல வரலாறுகள் சங்க நூல்களில் உள்ளன. அவ் வரலாறுகளில் சிலவற்றை நாம் நோக்குவோம்.

ஒரு கிழத்தாய் தனது ஒரே மகனுடன் வாழ்ந்து வந்தாள். அவள் முதுமைப் பருவத்தை அடைந்தவளாயினும் அவளது மனத்தில் வீரம் நிறைந்திருந்தது. அவள் தனது நாட்டிற்கு வரும் பழியை தனக்கு வருவதாகவே கருதினாள். ஒருநாள் அவ்வூரில் பகைவர்களுடைய போர் முரசத்தின் ஒலி கேட்டது. முரசத்தின் ஒலியைக்கேட்ட அம் முதியவள் நிமிர்ந்து எழுந்தாள். அவளுடைய ஒட்டி உலர்ந்த நரம்புகள் வலிவைப் பெற்றன. எழுந்து நடக்கவும் முடியாத நிலைமையில் இருந்தவள் வீரத்துடன் நின்றாள். அவளது வாடிய முகம் ஒளிபெற்றது. தன்னுடைய ஒரே மகனை மகிழ்ச்சியோடு அழைத்தாள்; போருக்குச் செல்லுமாறு அனுப்பினாள். மகன் செல்லும்பொழுது அவனைப் பார்த்து அம் முதியவள், 'மகனே! போரில் பகைவர்களை வென்று திரும்பு. பகைவர்களுக்கு அஞ்சி முதுகிட்டு ஓடிவராதே. மார்பில் புண் பட்டாலும் முதுகில் மட்டும் புண்படக் கூடாது. இதனை நீ நன்றாக நினைவில் வைத்துக் கொள்' என்று சொல்லி விடுத்தாள். தனது

ஒரே மகனைப் போருக்குப்போகச் செய்கின்றோமே என்று அவள் நினைக்கவில்லை; போரில் இறந்து விடுவானோ என்றும் அஞ்சவில்லை. போரில் அவன் வெற்றிவீரனாக விளங்கவேண்டும் என்று அவள் விரும்பினாள். ஒருவேளை அவன் முதுகு காட்டி ஓடிவந்துவிடுவானோ என்ற அச்சமே அவளுக்கு மிகுதியாக இருந்தது. எனவே அவ்விதமாக ஓடிவந்து தன் குடும்பத்திற்கு நீங்காத பழிச்சொல்லை உண்டாக்கி விடாமல் இருக்குமாறு அவள் தன் மகனுக்கு வற்புறுத்திக் கூறினாள்.

அம் மகனும் போர்க்களம் சென்றான். பல ஆண் யானைகளை வெட்டி வீழ்த்தினான். அதன் பயனாக அப்போர்க்களத்தில் யானைத் துண்டங்கள் பனந்துண்டங்கள் வெட்டப் பட்டுக் கிடந்ததைப்போல் கிடந்தன. அவன் விழித்த கண்ணை இமைக்கவில்லை. அஞ்சாது நின்று போர்செய்தான். பகைவரின் அம்புகள் அவனது முகத்திலும் மார்பிலும் பாய்ந்தன. அப்பொழுதும் அவன் வீரம் குறையாது நின்று பலரை வெட்டி வீழ்த்தினான். என்றாலும் முடிவில் அவன் பகைவர்களால் வெட்டுண்டான். அவனது கை கால்கள் தனித் தனியாகப் போர்க்களத்தில் கிடந்தன.

அச் சிறுவனது போரைக் கண்டு பலர் வியப்புற்றனர். சிலர் அவனுக்கு அத்தகைய வீரத்தை ஊட்டிய அவனது தாயின் மன நிலையைச் சோதிக்க விரும்பினர். அவர்கள் அம் முதியவளிடம் சென்று, விளையாட்டாக, 'உன் மகன் போரில் தோற்றனன்; முதுகில் புண்ணுடன் கிடக்கின்றான்' என்று பொய் கூறினர். அதனைக் கேட்ட அக் கிழத்தாய் தனது செவிகளையே நம்பவில்லை. அவளது முகம் சிவந்தது. உதடு துடித்தது. புருவம் மேலேறியது. சினம் விஞ்சியது. அவள் மற்றவர்களை நோக்கி, 'அப்படியா நடந்தது? எனது மகனா முதுகில் புண்ணுடன் தோற்றான். நான் இதனை நம்பமாட்டேன். போர்க்களம் போகின்றேன். நீங்கள் சொல்வது உண்மையானால் அம் மகனுக்குப்பால் கொடுத்த என் மார்பை அறுத்து எறிகின்றேன்,' என்று சபதம் கூறிக் கையில் வாளுடன் போர்க்களம் நோக்கி விரைந்து சென்றாள்.

போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடியது. யானைப் பிணங்கள் மலைபோல் கிடந்தன. கணக்கில்லாத குதிரைகள் அறுபட்டுக் கிடந்தன. அம் முதியவள் அப் போர்க்களத்தில் தன் மகன் எங்குக் கிடக்கின்றான் என்று

தேடினள்; மகனைக் கண்டாள். மகன் எந் நிலையில் கிடந்தான்? மார்பில் புண்களுடன் கிடந்தான். அவன் முகத்தில் வீரக் குறி மறையவில்லை. பார்த்தாள் அக்கிழத்தாய். மகன் இறந்தான் என்று வருந்தினளோ? புலம்பினளோ? அன்று அன்று. அப் பிள்ளை யைப் பெற்ற நாளில் அவள் எவ்வளவு மகிழ்ச்சியை அடைந்தாளோ அதனைக் காட்டி லும் பன் மடங்கு மகிழ்ச்சியை அடைந்தாள். தங்கள் குடியின் வீரப் பெயரை நிலைநாட்டி னனே என்ற மகிழ்ச்சியே அவள் மனத்தில் நிறைந்திருந்தது; அத்தகைய வீர மகனைப் பெற்றதற்காகப் பெருமிதம் அடைந்தாள். பெரிய காரியத்தைச் செய்து முடித்தவள் போல் பெருமையுடன் நடந்து சென்றாள். இது வன்றோ வீரம்!

மேற்காட்டியது போன்ற செய்திகள் பழந்தமிழ் நூல்களில் பல உள்ளன. ஓர் ஊரில் போர் நடந்துகொண்டிருந்தது. அவ்வூரில் ஒரு வீரத்தாய் இருந்தாள். அவளுக்கு ஒரு மகன் இருந்தான். அவளுக்கு இவ்வுலகத்தில் இருந்த செல்வம் எல்லாம் அம்மகனே ஆவான். ஏனைய செல்வங்களைக் காட்டிலும் தனது மகனையே அவள் பெரிய செல்வமாக நினைத்

திருந்தாள். அவளது தந்தை சில நாட்களுக்கு முன் போரில் ஆண் யானைகளை வெட்டி வீழ்த்தி இறந்தான். முதல் நாள் நடந்த போரில் அவளது கணவன் இறந்தான். பகைவர்கள் தம் அரசனது பசுக்களைக் கவர்ந்து சென்றதைப் பொறுக்காமல் அவன் தடுத்து நின்றான். அப்பொழுதுதான் அவன் இறந்தான். இந்த நிலையில் அவ் வீரத்தாய் தனது ஒரே மகனைத் தனக்கு உற்ற துணையாகக் கருதியிருந்தாள். அப்படி இருக்கும்பொழுது பகைவரின் போர்ப் பறையொலி கேட்டது. கேட்டவுடன் அவள் விருப்பத்தோடு எழுந்தாள்; தனது மகனை அழைத்தாள்.

அம் மகனோ இளைஞன். அவன் அப்பொழுது வீதியில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனது ஆடை புழுதிபட்டு அழுக்காக இருந்தது. மண்ணை வாரி வீசியும், மண்ணில் விழுந்தும் அவன் விளையாடிக்கொண்டிருந்தான். ஆதலால் அவனது உடல் முழுவதும் புழுதியாக இருந்தது. அம் மகனை அத்தாய் அருகில் அழைத்து ஆசையுடன் அணைத்துக் கொண்டாள்; உடம்பைத் துடைத்து அழுக்கை அகற்றினாள்; தலையில் எண்ணெய் பூசி வாரி முடித்தாள்; வெண்மையான

ஆடையை உடுத்தி விட்டாள்; கையிலே வேலி னைக் கொடுத்தாள். அவனுக்கு வேலை எவ் வாறு பிடிப்பதென்று கூடத் தெரியாது. வேலை எப்படிக் கையில் பிடித்துக்கொள்வது என்பதை அவள் அவனுக்குக் கற்பித்தாள். போர்க்களம் செல்லும் வழியும் அம் மகனுக் குத் தெரியாது. எனவே அவள் போர் நடக்கும் இடத்திற்குப் போகும் வழியை அவனுக்குக் காட்டினாள்; போருக்குச் செல்லுமாறு விடுத் தாள்.

அவ்வீரத்தாயின் மன நிலையை ஆராய்ந்து பாருங்கள். அவளுக்குத் தந்தையும் கண வனும் இல்லை. வேறு துணைவரும் இல்லை. அப்படி இருந்தாலும் தன்னைக் காப்பாற்ற தனது மகனாவது உயிருடன் இருக்க வேண் டுமே என்று அவள் நினைக்கவில்லை. போருக்கு அனுப்ப அந்த மகனாவது இருக்கிறானே என்று தான் அவள் கருதினாள். அவன் சிறுவனாக உள்ளானே என்ற எண்ணம் அவளுக்கு உண் டாகவில்லை. வேலைக் கையிலே கொடுத்து அனுப்பினாள். விளையாடிக்கொண்டிருந்த தன் ஒரு மகனை அவள் போருக்குத் துணிந்து அனுப் பினாள்! அவளது மனம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்! 'கல்லோ அன்றி இரும்போ அவளது மனம்?' என்று சிலர் நினைக்கலாம்.

அவளது மனம் கல்லும் இரும்பும் அல்ல. பெற்ற மகனிடம் அவளுக்கு அன்பு இல்லாமல் இருக்குமோ ? அவளுக்குத் தன் மகனிடம் பேரன்பு இருந்தது. ஆனால் அவள் மனத்தில் வீர உணர்ச்சி மிகுதியாக இருந்தது. அந்த வீர உணர்ச்சியே அப்படிச் செய்யுமாறு அவளைத் தூண்டியது. என்னே அவளது வீரம் !

மற்றொரு ஊரில் ஒரு வீரத்தாய் இருந்தாள். அவளுக்கும் ஒரு மகன் இருந்தான். அவன் வீட்டில் இருப்பதே இல்லை. போர் செய்வதற்குப் பழகுவதே அவனுக்கு விருப்பமாக இருந்தது. மகனது போர் விருப்பத்தைக் கண்ட தாய் அதனால் பெருமகிழ்ச்சி கொண்டாள். மகனை அவள் தடைசெய்யவில்லை. அவன் பெருவீரனாக விளங்கவேண்டும் என்பதே அவளது விருப்பமாகும். ஒரு நாள் அம்மகன் வழக்கம்போல் எவ்விடமோ சென்றிருந்தான். அப்பொழுது அத்தாயின் தோழி ஒருத்தி அவளைப் பார்க்க வந்தாள். அந்தத் தோழி அத்தாயைப் பார்த்து 'உனது மகன் எங்கே ? காணவில்லையே ?' என்று கேட்டாள். அதற்கு அந்தத் தாய் புன்னகை புரிந்தாள். அப்புன்னகையில் ஒரு பெருமிதம்

இருந்தது. அவள் தன் தோழியைப் பார்த்து, 'தோழீ! "எனது மகன் எங்கே?" என்று நீ கேட்கின்ருய். உனது கேள்வி ஆச்சரியமாக இருக்கின்றதே. இதைக் கேட்கவும் வேண்டுமோ? எனது மகன் எங்கே சென்றிருக்கின்ருன் என்பது எனக்குத் திண்ணமாகத் தெரியாது. ஆனல் ஒன்றுமட்டும் நன்கு தெரியும். அவன் போர் நடக்கின்ற இடத்தில்தான் தவருமல் இருப்பான். எனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஒரு குகை இருக்கிறது என்று வைத்துக்கொள். அந்தக் குகையில் ஒரு புலி சிலநாட்கள் தங்கியது என்று நினைத்துக்கொள். அப்புலி அந்தக் குகைக்குத் தான் திரும்பும் என்று ஐயமின்றிக் கூற முடியுமோ? அதனுடைய வேலை வீரத்துடன் மற்ற மிருகங்களைக் கொல்வது அல்லவா? அந்தப் புலிபோன்றவன்தான் என் மகன். எனது வயிறு அந்தக் குகை போன்றது. புலிக்கும் குகைக்கும் என்ன தொடர்போ அதே தொடர்புதான் எனக்கும் என் மகனுக்கும் உண்டு. அவனைப் பார்க்க விரும்பினல் போர்க்களத்தில் சென்று தேடு. அங்கு எவ்விடத்திலாவது அவன் போர் செய்து கொண்டிருப்பான்' என்று கூறினள். இப்படிக் கூறும்பொழுது அவளது முகத்தைப் பார்க்கவேண்டுமே! முகத்

தில் வீர உணர்ச்சி பொங்கியது. வீரம் வாய்ந்த மகனைப் பெற்ற மிடுக்கு அவளிடம் காணப் பட்டது. அவளது வீரவுணர்ச்சியை நினைத்துப் பாருங்கள். மகன் போர்க்களத்தில் காணப் படுவான் என்பதைச் சிறிதும் அச்சமும், சோர்வும் இல்லாமல் அவள் சொல்கிருள். இத் தகைய வீரத்தாய்மார்கள் பழந் தமிழ் நாட் டில் மிகுதியாக இருந்ததனுல்தான் அக்காலத் தில் வீரர்கள் பலர் நம் நாட்டில் வாழ்ந்தனர்.

தமிழ் நாட்டுப் பெண்டிர் பலர் வீர உணர்ச்சியுடன் விளங்கியதை நாம் அறிவோம். அங்ஙனமே வடநாட்டில் பல வீர மங்கையர் வீரத்துடன் போர் செய்துள்ளனர். அவர்கள் போரில் இறந்தாலும் அவர்களுடைய பேரும் புகழும் இவ்வுலகம் உள்ளவரையில் நிலைத்து நிற்கும். மராத்திய மங்கையரும், இராசபுத்திர இளவரசிகளும் இளமைப் பருவத்திலிருந்தே படைக்கலங்களை ஏவப் பழகி வந்தனர். பகை வர்களால் தம் நாட்டிற்குத் தீங்கு வரும்போல் இருந்தால் அவர்கள் கையில் வாளேந்தி வீர உணர்ச்சி கொண்டு எழுவார்கள். ஆடவர் களைக் கண்டு அவர்கள் அஞ்சமாட்டார்கள். வீரத்துடன் போர் செய்து விண்ணுலகு புகு வார்கள். அவ்வாறு வீரத்தையே தனக்கு

அணியாகக்கொண்ட வீரப்பெண்மணி ஒருத்தியின் வரலாற்றை இனி அறிவோம். அவளது பெயர் ஜான்ஸி இராணி இலக்குமிபாய். இனி வரும் பகுதிகளில் அவ்வீரப் பெண்மணியின் வாழ்க்கையையும், வீர உணர்ச்சியையும் நாம் விரிவாகாக் காண்போம்.

# 2. இளமைப் பருவமும் இல்லறவாழ்க்கையும்

இலக்குமிபாய் என்னும் வீரப்பெண்மணி இந்நிலவுலகத்தில் 1835-ஆம் ஆண்டில் தோன்றினாள். அவளது தந்தை மோரோபந்த் தம்பே என்பவராவர். அவளை ஈன்ற அம்மையார் பகீரதிபாய் என்பவர். அவ்விருவரும் மிக ஏழைகளாய் இருந்தனர். அவர்கள் கங்கைக் கரையில் சிறந்து விளங்கும் காசியில் வாழ்ந்த காலத்தில் தான் இலக்குமிபாய் பிறந்தாள். அவளுக்குப் பெற்றோர்கள் இட்ட பிள்ளைப் பெயர் மனுபாய் என்பதாகும். ஆனால் பிற்காலத்தில் அவளது இயற்பெயர் மறைந்தது. இலக்குமிபாய் என்ற பெயராலேயே எல்லோரும் அவளைக் குறிப்பிட்டனர்.

இலக்குமிபாய் தோன்றுவதற்கு முன்னர் 1824-ஆம் ஆண்டில் மராத்திய தேசத்தில் ஒரு வீரர் தோன்றினார். அவ்வீரரின் பெயர் பீஷ்வா நாஞ சாகிப் என்பதாகும். அவர் வேணு என்னும் கிராமத்தில் மாதவராவ் என்பவருக்கும், கங்காபாய் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். நாஞ சாகிபின் பெற்

ரோர்கள் உயர்ந்த மதிப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். விதிவசத்தால் ஏழ்மை நிலையில் அவர்கள் இருந்தனர். என்றாலும் மகனது முகத்தைக் கண்ட பெற்றோர்கள் தமது இல்வாழ்க்கையின் இன்னல்களை மறந்து விட்டனர்.

சென்ற நூற்றாண்டில் நமது இந்தியாவில் 'சிப்பாய்க் கலகம்' நடந்தது. அக்கலகத்தின் முன்னணியில் நின்று சிறந்தவர்கள் இலக்குமிபாயும், பீஷ்வா நானாசாகிபும் ஆவர். அவ்விருவரும் அண்ணனும் தங்கையும் போல் அன்பு கொண்டு இளமை முதல் வாழ்ந்தனர். சிப்பாய்க் கலகம் தொடங்கிய காரணங்களையும், நடந்த விதத்தையும், அதனுள் இவ்விருவரும் எவ்விதமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர் என்பதையும் பின்பு விரிவாகக் கூறுவோம்.

இலக்குமிபாயும், நானாசாகிபும் இளமையில் ஒன்றாக வாழுமாறு நேரிட்டது. அவ்விருவரும் பாஜிராவ் பீஷ்வாவின் ஆதரவில் ஒன்று சேர்ந்து வளர்ந்துவந்தனர். பாஜிராவ் பீஷ்வா என்பவர் மராத்திய சாம்ராச்சியத்தின் தலைவராவார். அவர் தமது அரச காரியங்களில் வெறுப்புக்கொண்டார்; மனத்திற்கு ஓய்வு

கொடுக்க விரும்பினர். அதனல் அவர் கங்கைக் கரைக்கு வந்திருந்தார். அவரைப் பின்பற்றிப் பலர் வந்திருந்தனர். அரசரும் அவர்களை ஆதரித்துவந்தார். நாஞசாகிபின் பெற்ரோர் களும் அந்த அரசரால் பாதுகாக்கப்பட்டனர். குழந்தையாக இருந்த நாஞசாகிபின் முகத் தோற்றத்தைக் கண்டு அரசர் அகமகிழ்ந்து அக் குழந்தையினிடம் மிக அன்பு வைத்திருந் தார். நாளடைவில் அந்த அன்பு முற்றி அக் குழந்தையை அரசர் தத்துப்பிள்ளையாகக் கொண்டார். அப்பொழுது அக் குழந்தைக்கு வயது ஏறக்குறைய மூன்றுதான். இதற்குச் சில ஆண்டுகள் கழிந்தபிறகுதான் இலக்குமி பாயின் பெற்ரோர்கள் பாஜிராவ் பீஷ்வாவி னிடம் வந்து சேர்ந்தனர். எனவே இலக்குமி பாயும், நாஞசாகிபும் இளமைப் பருவத்தில் ஒன்ருக வளரும்படி விதி சேர்த்துவிட்டது.

இலக்குமிபாய் நாஞசாகிபை 'அண்ண' என்று அழைத்து வந்தாள். நாஞசாகிபோ இளமையில் வீரத்துடன் விளங்கினர்; யானை யேற்றம், குதிரை யேற்றம் முதலியவற்றில் நிகரற்று இருந்தார்; வாட் போர் புரிவதில் விருப்பம் அதிகம்; யானையில் ஏறுவதும், குதிரையை ஊர்வதும், வாளைச் சுற்றிப் பழகு வதும் நாஞசாகிப்புக்கு பொழுதுபோக்கும்

விளையாட்டுக்களாக இருந்தன. அச் சமயங்களில் இலக்குமிபாய் நானுசாகிபின் அருகில் இருப்பாள். நானுசாகிபே இலக்குமிபாய்க்கு இளமையில் ஆசிரியராக இருந்தவர் என்று கூறலாம். அவரது உதவியால் இலக்குமிபாய் குதிரையில் ஏறிச் சவாரி செய்யவும், வாட்போர் செய்யவும் நன்கு பழகிக்கொண்டாள். அப்பொழுது நானுசாகிபிற்கு வயது பதினெட்டு நடந்துகொண்டிருந்தது. இலக்குமிபாயோ ஏழு வயது நிரம்பிய சிறுமியாக இருந்தாள்.

இவ்வாறு இவ்விருவரது நட்பும் பிறைச் சந்திரனைப் போல் வளரத் தொடங்கியது. இந்தச் சமயத்தில் அவர்களுக்கு தாந்தியா தோபி என்ற மற்றோர் இளைஞரின் நட்பு உண்டாயிற்று. அவர் மராத்திய மரபைச் சேர்ந்தவர்; அரச குடும்பத்துடன் தொடர்பு கொண்டவர். கடவுளே அம்மூவரையும் ஒன்று சேர்த்தார் என்று சொல்லவேண்டும். அம்மூவரும் சேர்ந்து சிப்பாய்க் கலகத்தில் காட்டிய வீரச் செயல்கள் நமது நாடு உள்ளளவும் மறையாது. இம்மூவரையும் அடக்க ஆங்கிலேயர்கள் பட்டபாடு இவ்வளவென்று சொல்ல முடியாது. 1857-ஆம் ஆண்டு நடந்த சிப்பாய்க் கலகத்தில் இவர்களைப் பற்றியே எங்கும் பெரும்பேச்சாக இருந்தது.

மேற் காட்டிய மூவரும் நண்பர்களாய் வளர்ந்த காலத்தில் இலக்குமிபாய் கங்காதர ராவ் என்ற பேரரசருக்கு மணஞ் செய்து கொடுக்கப்பட்டாள். கங்காதரராவ் அப்பொழுது ஜான்ஸி நாட்டின் அரசராக இருந்தார். ஜான்ஸி நாடு மத்திய இந்தியாவில் அக்காலத்தில் சிறந்து விளங்கியது. அந்நாடு ஒரு சிறு நாடேயாயினும் அது பெருமையை மிகுதியாகக் கொண்டிருந்தது. அக்குறுநாட்டைக் கைப்பற்றப் பல பகைவர்கள் முயன்றனர். முயன்றும் என்ன? அதனைத் தம் வசப்படுத்த யாராலும் முடியவில்லை. அந்நாட்டைச் சத்திரசாலர் என்ற அரசர் ஆண்டு வந்த காலத்தில் மராத்திய வீரசிங்கமாகிய சிவாஜி என்பவர் வீரர்க்கு வீரராய் விளங்கினர். எனவே சத்திரசாலர் இறக்குங் காலத்தில் தமது ஜான்ஸி நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பை சிவாஜியினிடம் ஒப்படைத்து விட்டார். அது முதல் ஜான்ஸி நாடு மராத்திய சாம்ராச்சியத்தைச் சேர்ந்த நாடாயிற்று.

பின்பு இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வலிமை பெற்றனர். நாளடைவில் ஜான்ஸி

நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அடங்கிய ஒரு நாடாயிற்று. எனினும் அரசாளும் உரிமை மராத்தியருக்கே இருந்து வந்தது. அத்தகைய நிலையிலேயே கங்காதரராவ் அச்சிறு நாட்டின் அரசராக இருந்தார். அவரே அந்நாட்டை ஆண்ட கடைசி அரசர் ஆவார். அவர் ஒரு சிறந்த அரசர்; கல்விக் களஞ்சியம்; கற்றவர் களை நன்கு ஆதரித்தார். அவரது அவையில் புலவர்கள் பலர் இருந்தனர். அவருடைய ஆட்சிக் காலத்தில் ஜான்ஸி நாட்டு மக்கள் பல நன்மைகளை அடைந்தனர். அவரது குடையின் கீழ் ஜான்ஸி நாடு சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. அத்தகைய சிறந்த அரசருக்கே நமது இலக்குமிபாய் மாலையிட்டாள்; ஜான்ஸி நாட்டின் இராணி ஆயினள். மனுபாய் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்த அவள் இராணி ஆனதும் அவளை யாவரும் 'இராணி இலக்குமி பாய்' என்று அழைத்தனர்.

கல்வியில் சிறந்த கங்காதரராவுக்கு இலக்குமிபாய் ஏற்ற மனைவியாக இருந்தாள். அரசகாரியங்களில் அவள் தன் கணவருக்கு உதவி செய்தாள். கங்காதரராவ் தமது மனைவியினுடைய அறிவையும், குணத்தையும், அழகையும் கண்டு பூரித்தார். அவளைத் தம்முயிருக்கு

மேலாக மதித்து வந்தார். இலக்குமிபாயும் தன் கணவரைக் கடவுளாகக் கருதி அவரிடம் அன்புடன் நடந்துவந்தாள். அந்நாட்டு மக்கள் அரசரையும், இராணியையும் தம் பெற்ருேர் களாகவே கருதி வந்தனர். இவ்வாறு அரசரும், இராணியும் இன்பமாக வாழ்ந்து வந்தனர்.

# 3. அரசியல்

கங்காதரராவும், இலக்குமிபாயும் மிக ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். மலரும் மணமும் போலவும், உடலும் உயிரும் போலவும், மணியும் ஒலியும் போலவும் அவர்கள் ஒன்றுபட்டிருந்தனர். இவ்வுலகத்தில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருமல்லவா? இன்பத்தை அடைந்தவர்கள் பிறகு துன்பத்தை ஒரு காலத்தில் அடையத்தான் வேண்டும். முதலில் துன்பத்தை அடைந்தவர்கள் பிறகு இன்பத்தைத் தவறுமல் அடைவார்கள். அரசரையும், அரசியையும் எல்லோரும் புகழ்ந்தனர். அவர்களுடைய ஒற்றுமையைக் கண்ட கூற்றுவன் பொறாமை கொண்டான்போலும்! 1853-ஆம் ஆண்டு அரசர் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். அப்பொழுது இராணிக்கு வயது பதினெட்டுத்தான். ஆ! என்ன கொடுமை! பதினெட்டு வயது நிரம்பிய இளம் பெண் தன் அருமையான கணவரை இழக்கும்படி நேரிட்டது! இது விதியின் விளையாட்டு அல்லவா? உலகத்தின் இன்பங்களைத் துய்க்க வேண்டிய இளம்பருவத்தில் இலக்குமிபாய் தன் இல்லறத் துணைவரை இழந்தாள்!

கங்காதரராவ் இறக்கும்பொழுது அவருக்குக் குழந்தை இல்லை. அது அவருக்குப் பெருங் குறையாக இருந்தது. அவர் இறக்கும்பொழுது தம் இள மனைவியாகிய இலக்குமிபாயைப் பார்த்தார். அவர் மனம் உருகியது. அவளைப்பார்த்து அவர், 'கண்ணே! கவலைப்படாதே. தாமோதரன் என்ற சிறுவனை நான் தத்து எடுத்துக் கொள்கிறேன். அவனை ஒரு சிறந்த வீரனாகப் பழக்கு. அவன் அரச பதவியைப் பெறுவதற்கேற்ற பருவத்தை அடையும் வரையில் நீ அரசியாக இரு. குடிகளின் இன்ப துன்பங்களை உனது இன்ப துன்பங்களாக நினைத்துக்கொள். நீ இந்நாட்டிற்கு உயிர் என்பதை மறவாதே. நாட்டை அன்னியரிடம் கொடுத்துப் படுகுழியில் தள்ளிவிடாதே. என் உயிரே! வருந்தாதே. நான் செல்கிறேன்,' என்று கூறி இறந்தார். அப்பொழுது இலக்குமிபாயின் மனம் எப்படி இருந்திருக்குமென்று நினைத்துப் பாருங்கள். அழுதாள்; விழுந்தாள்; புரண்டாள்; புலம்பினாள்; என்ன பயன்? மாண்டவர்கள் மீள்வார்களோ? 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ' என்பது பெரியோர்களின் அறிவுரை அல்லவா?

பலவாறு புலம்பிய இலக்குமிபாய்க்குத் தன் கணவர் இறக்கும்பொழுது சொல்லிச்

சென்றசொற்கள் நினைவுக்குவந்தன. 'நாட்டை நன்கு காப்பாற்று' என்ற சொல் அவளுடைய மனத்தில் பசுமரத்து ஆணி போல் பதிந்து விட்டது. தனது குடிகளைக் காப்பாற்றுதல் தன் கடமை என்று முடிவு செய்தாள். வருத் தத்தை விடுத்தாள். தாமோதரன் என்ற சிறு வனையே மகனாகக் கொண்டாள்; அர சியாக இருந்து நாட்டை அரசாளத் தொடங் கினாள்.

ஒரு நாட்டின் அரசர் செங்கோல் செலுத் தினால் தான் குடிகள் மகிழ்ச்சியோடு வாழ்வார் கள். அரசன் கொடுங்கோலனாக இருந்தால் குடிகள் சொல்ல முடியாத அல்லலை அடை வார்கள். அரசனுக்கு உரிய கடமைகள் பல உள்ளன. ஒரு நாட்டிற்கு நெல்லும் நீரும் உயி ரல்ல. அரசனே உயிர் ஆவான். ஏன்? அரசன் செங்கோல் செலுத்தினால் குடிகள் தத்தங் காரி யங்களைச் சரியாகச் செய்து முடிப்பர்; அந்த ணர்கள் யாகங்கள் செய்வர்; பெண்கள் தம் கற்பினைக் காப்பாற்றிக்கொள்வர். அரசனது செங்கோலுக்காக ஒரு மழையும், அந்தணர் கள் செய்யும் யாகத்தின் பொருட்டு ஒரு மழை யும், பெண்டிரின் கற்பின் பொருட்டு ஒரு மழையும் ஆக மாதம் மும்மழை பொழியும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். எனவே,

ஒரு நாட்டில் அரசன் செங்கோல் செலுத்தினுல்தான் மழை பெய்யுமென்பதை அறியலாம். மழை பெய்தால்தான் பயிர்கள் விளையும். மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கும். ஆகவே அரசனே ஒரு நாட்டிற்கு உயிர் ஆவான். குடிகளுக்குச் செல்வம் பெருகினுல் அவர்கள் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரிகளைத் தவருமல் முழு மனத்துடன் கொடுப்பார்கள். ஆதலால் குடிகள் உயர்ந்தால்தான் அரசன் உயர முடியும். எனவே குடிகளுடைய இன்பத்தில் அரசன் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டுவதன் இன்றியமையாமையை நாம் நன்ருகத் தெரிந்து கொள்ளலாம். இதனுலேயே 'குடி உயரக் கோல் உயரும்' என்ற பழமொழி வந்தது.

இலக்குமிபாய் தனது கடமைகளை நன்கு உணர்ந்திருந்தாள். 'குடிகளின் உயர்வே தனது உயர்வு' என்பதை நன்ருக அறிந்திருந்தாள். அரசர்க்குப் பல பொறுப்புக்கள் உண்டு என்பதைத் தெரிந்து கொண்டாள். ஒரு நாட்டில் மழை பெய்யவில்லை என்ருலும், குடிகளுக்குத் துன்பங்கள் உண்டானுலும், நீர் நிலைகள் வற்றினுலும் குடிகள் அரசரையே பழிப்பார்கள். இந்த உண்மையை இராணி மறக்கவில்லை. அரச காரியங்களைத்தானே நேரில்

கவனித்து வந்தாள். அவளுக்கு இலக்குமமண ராவ் என்பவர் திவானுக இருந்தார். அவரது காரியங்களை இராணி நன்ருக மேற்பார்வை யிட்டுச் சமயத்திற்கு ஏற்பக் கட்டளைகளை அளித்து வந்தாள்.

இராணி நாள்தோறும் விடியற்காலையி லேயே படுக்கைவிட்டு எழுந்து விடுவாள்; நறு மணம் கலந்த நீரில் முழுகுவாள்; தெய்வ வணக் கம் செய்வாள். துதிப்பாடலைப் பாடுவாள்; புராணங்கள் கேட்பாள். பிறகு அவள் உணவு உட்கொள்வாள்; மாலையில் சுமார் மூன்று மணிக்குத் தனது அரசிருக்கை மண்டபத்தை அடைவாள்; அப்பொழுது ஆணுடை அணிந் திருப்பாள். அவளது கையில் அழகிய வாள் மின்னும். கையில் வீரவாளுடன் காட்சியளித்த இலக்குமிபாய் வீர இலக்குமியாகவே விளங் கினுள். அவள் அரச காரியங்களை ஒழுங்காக மேற்பார்வையிட்டாள். தன் கையெழுத்தின் பொருட்டுத் திவான் கொடுக்கும் ஒவ்வொரு கடிதத்தையும் அவள் நன்ருகப் படித்துப் பார்த்துக் கையெழுத்து இடுவாள். வேலையில் அவள் சோம்பல் கொண்டதே இல்லை. அவள் வெளியில் செல்லும்பொழுது பல்லக்கிலேயே செல்வது வழக்கம். விரும்பியபொழுது குதிரையின் மேலும் செல்வாள். அவள்

பல்லக்கில் செல்லும் பொழுது வாள் வீரர்களும், அமைச்சர்களும், சிற்றரசர்களும் அவளைச் சூழ்ந்து செல்வார்கள். ஐரோப்பியர்களும் உடன் செல்வது உண்டு. பல்லக்கின் முன்னும் பின்னும் குதிரை வீரர்கள் அழகாகக் குதிரைகளின் மேல் அணிவகுத்துச் செல்வர்.

ஒரு நாட்டுக் குடிகளுக்கு ஐந்து விதமான துன்பங்கள் வருவது இயல்பு. அவை: அரசனாலும், அரசனைச் சேர்ந்தவர்களாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், காட்டு விலங்குகளாலும் என்ப. இலக்குமிபாய் இவ்விதமாகத் துன்பம் வராமல் மக்களைக் காப்பாற்றினாள். அரச காரியங்களை அவளே செய்து வந்தாள். ஆதலால் அவளால் குடிகளுக்கு எவ்விதமான துன்பமும் வந்ததில்லை. தரும காரியங்களையோ, வேறு பொதுக் காரியங்களையோ அவளே முன்னின்று செய்தாள். அவள் வீரம் உடையவளாதலால் பகைவர்கள் அவளது நாட்டின் மேல் படையெடுக்க அஞ்சினார். அவள் ஏழைகளிடமும், நோயுற்றவர்களிடமும் மிக அன்பு காட்டினாள். பல சொல்லி என்ன?

குடிகள் அவளைக் கடவுளாகவே நினைத்தனர். அவளது வீரர்கள் அவள் பொருட்டுத் தம் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருந்தனர். இவ்வளவுக்கும் காரணம் அவளது நடுநிலைமையே ஆகும்.

ஒரு நாட்டிற்குச் சிறந்த உறுப்புக்கள் சில உண்டு. அவற்றுள் மிகச் சிறந்தது படைகளேயாகும். படைகள் நான்கு வகைப்படும். அவை: யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகியவையே. இலக்குமிபாய், குதிரைப் படைகளைச் சிறந்த முறையில் தயாரித்து வைத்திருந்தாள். எவ்வளவு பெரிய படையாக இருந்தாலும், அரசர் பொருட்டுத் தம் உயிரையும் கொடுக்கவல்ல வீரர்கள் இல்லை என்றால் அப்படையினால் ஒரு பயனும் இல்லை என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். இலக்குமிபாயின் குதிரை வீரர்கள் தம் அரசியினிடம் மதிப்பும், மரியாதையும் மிகுதியாக வைத்திருந்தனர்.

முற்காலங்களில் அரசர்களே படைகளைச் செலுத்திக்கொண்டு போருக்குப் போவது வழக்கம். அவ்வழக்கமே சென்ற நூற்றாண்டிலும் இருந்தது. அரசரே படையினைச்செலுத்திச் செல்வதில் பெரும் பயனுண்டு. வீரர்கள்

தம் அரசரது முகத்தைப் பார்த்த அளவில் புதிய ஊக்கத்தைப் பெறுவர். அரசர் காட்டும் வீரத்தைக்கண்டு தாமும் தம்வீரத்தைக்காட்டுவர். 'அரசரே தமது உயிரைப் பொருட்படுத்தாது போர் முனையில் நின்று போர்செய்யும் பொழுது நாம் ஏன் நமது உயிரையும் கொடுக்கலாகாது' என்ற எண்ணம் ஒவ்வொருவீரனின் மனத்திலும் தோன்றும். இக்காரணங்களால் தான் அரசர்களே முன்னின்று படைகளைச் செலுத்திச் செல்கின்றனர். இலக்குமிபாயும் தன் குதிரைப்படைக்குத் தானே தலைவியாக இருந்தாள். அவளது வீரச்சொற்களைக்கேட்ட குதிரை வீரர்கள் வீரவுணர்ச்சியை மிகுதியாகப் பெற்றனர். எனவே அரசியின் கட்டளை எதுவாக இருந்தாலும் செய்து முடிக்க அவர்கள் எப்பொழுதும் தயாராக இருந்தார்கள்.

நிலைமை இப்படியே நிலைத்திருந்தால் எல்லாம் நன்ருக நடந்திருக்கும். 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது பழமொழி அல்லவா? இலக்குமிபாய் ஏறக்குறைய நான்கு ஆண்டுகளே அரசாட்சி செய்ய முடிந்தது. இத்தகைய சிறந்த ஆட்சியின் கீழ் வாழ அந்நாட்டு மக்கள் கொடுத்து வைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஏன்? அப்பொழுது தோன்றிய சிப்பாய்க் கலகத்தில் இராணி முன்னணியில் நின்ருள். அக்கலகம் தொடங்கிய காரணங்களையும் அக்கலகத்தில் நமது இராணி எடுத்துக்கொண்ட பங்கையும் அக்கலகம் முடிந்த விதத்தையும் யாம் இனி வரும் பகுதிகளில் பார்ப்போம்.

# 4. சிப்பாய்க் கலகம்

சிப்பாய்க் கலகம் எவ்வாறு தொடங்கியது? எங்கே தொடங்கியது? ஏன் தொடங்கியது? என்று முடிவாகச் சொல்ல முடியாது. அது தொடங்கியதற்குப் பல காரணங்கள் உள்ளன. கலகம் திடீர் என்று தொடங்கிவிடவில்லை. அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னதாகவே கலகத்தீ தோன்றுவதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன என்றே சொல்ல வேண்டும். கலகத்தைச் சுதேச அரசர்கள் பயன்படுத்திக் கொண்டனர். அன்னியரிடம் தமது வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள அதுவே ஏற்ற சமயம் என்று அவர்கள் கருதினர். கலகக்காரர்களைத் தூண்டி விட்டனர்; துணை செய்தனர். தாமும் நேரடியாகக் கலகத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். அவ்வாறு அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு, கலகத்தில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டவர்கள் நானா சாகிபு, தாந்தியாதோபி, இராணி இலக்குமிபாய், குன்வார்சிங் போன்ற சிலராவர். அவர்களுள் இராணி இலக்குமிபாய் முன்னணியில் நின்று வீரப்போர் புரிந்தாள்.

சிப்பாய்க் கலகத்தைச் சிலர் இராணுவ சம்பந்தமான கலகம் என்கின்றனர். நிலை குலைந்த மொகலாய சாம்ராச்சியத்தை நிலை நாட்ட எழுந்த கலகம் என்கின்றனர் வேறு சிலர். முடியிழந்த சுதேச மன்னர்கள் தூண்டுதலால் தோன்றிய கலகம் என்கின்ற னர் ஒருசிலர். இவை எல்லாவற்றையும் சிறந்த காரணங்கள் என்று சொல்லிவிடமுடியாது. அன்னியர் ஆட்சியில் பலர் கொண்ட வெறுப்பே மறுக்கமுடியாத பெருங்காரண மாகும். டல்ஹெளசி பிரபுவின் ஆட்சிக் காலத்தில் அவர் நாடு சேர்த்தமுறை பலருக்கு மிகச் சினத்தை உண்டாக்கி விட்டது.

டல்ஹெளசி பிரபு நாடு சேர்த்த முறை பல சுதேச அரசர்கள் ஆங்கிலேயரிடம் பகைமை கொள்ளக் காரணமாக இருந்தது. ஒரு அரசன் மகன் இல்லாமல் இறந்தால் அவ் வரசனின் நாடு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. மகனில்லாத அரசன் ஒருவன் ஒரு சிறுவனை மகனைகத் தத்து எடுத் துக்கொள்ள விரும்பினுல் ஆங்கில அரசாங்கத் தாரின் இசைவை முன்னதாகவே பெறவேண் டும். மகனில்லாத இந்து அரசர் எவரும் ஒரு இளைஞனை மகனைகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள

லாம் என்பது இந்து தர்ம சட்டமாகும். என்ருலும் அவ்வரசர்கள் பெயரளவில் வேண்டுமாஞல் வேறு மகனைத் தத்து எடுத்துக் கொள்ளலாம் என்றும், ஆனல் அரசியல் நடத்தும் பொறுப்புகள் தங்களிடம் இருக்க வேண்டும் என்றும் ஆங்கிலேயர் கூறினர்.

ஜான்ஸி அரசர் 1853-ஆம் ஆண்டில் இறந்த செய்தி முன்னமே குறிப்பிடப்பட்டது. அவர் இறக்குங் காலையில் தாமோதரன் என்ற சிறுவனைத் தத்து எடுத்துக்கொண்டார். ஆங்கில அரசாங்கம் அதை ஏற்கவில்லை. தங்களுடைய நாட்டு நடவடிக்கைகளில் அன்னியர் தலையிடுவது இராணீ இலக்குமிபாய்க்கு மிகச் சினத்தை உண்டாக்கியது. அதுவரையில் ஜான்ஸி அரசர்கள் ஆங்கிலேயருக்கு நண்பர்களாகவே இருந்து வந்தனர். எனவே அரசி இச்செய்கையால் உள்ளம் குமுறினுள். மனத்தில் வஞ்சம் கொண்டாள். பகைவரைப் பழி வாங்கத் தகுந்த சமயம் எப்பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருந்தாள். சிப்பாய்க் கலகமும் வந்தது. இராணி அதுவே வஞ்சம் தீர்க்க ஏற்ற சமயம் என்று கருதினுள். கலகத்தில் முதல் பங்கு எடுத்துக் கொண்டாள். இராணி இலக்குமிபாய் சிப்பாய்க் கலகத்தில்

நேரடியாகக் கலந்து நின்று போர் செய்த தற்கு இதுவே காரணமாகும்.

ஆங்கிலரது அரசாட்சிக் காலத்தில் ஆங்கிலக் கல்வி நன்கு பரவியது. ஆங்கிலக்கல்வி பரவியதைக் கண்ட இந்திய மக்கள் மனத்தில் அச்சம் கொண்டனர். ஆங்கிலக்கல்வியின் முன்னேற்றத்தினுல் தங்களுடைய நாட்டு மொழிகள் நசிந்து விடுமோ என்று பலர் எண்ணினர். அன்றியும் ஆங்கிலேயர் தவருன எண்ணத்துடன்தான் ஆங்கிலக் கல்வியை பரப்புகின்றனர் என்றும் சிலர் நினைத்தனர். அப்பொழுது இந்திய தேசத்தில் பல இருப்புப் பாதைகள் புதியதாக அமைக்கப் பட்டன. தந்தி முறையும் ஏற்படுத்தப் பட்டது. இவற்றை எல்லாம் ஆங்கிலர் தம்மை அடக்கும் பொருட்டே அபிவிருத்தி செய்தனர் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் பதிந்து விட்டது. இவை போன்ற பல புதிய நிகழ்ச்சிகளால் மக்களின் அச்சம் அதிகரித்து அவர்களுடைய உள்ளம் குமுறிக் கொண்டிருந்தது.

இதே சமயத்தில் இந்தியப் படைகளில் சேர்ந்திருந்த வீரர்கள் மனத்திலும் வெறுப்பு உண்டாகத் தொடங்கியது. படையிலிருந்த

ஆங்கில வீரர்களுக்குச் சில தனிப்பட்ட சலுகைகள் காட்டப்பட்டன. ஆங்கில வீரர்களைக் காட்டிலும் நான்கு அல்லது ஐந்து பங்கு அதிகமாக இந்திய வீரர்கள் இந்தியப் படையில் இருந்தனர். முதலில் இந்திய வீரர்கள் தம் மேலதிகாரிகளின் ஏவல்களுக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். இவ்வாறு படிப்படியாய் இந்தியச் சிப்பாய்க் கலகம் செய்யக் காத்திருந்தனர்.

அதுபொழுது இந்திய வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த புதிய துப்பாக்கிகளில் பசுவின் கொழுப்பும் பன்றிக் கொழுப்பும் பூசப்பட்டிருந்தன என்ற செய்தி எங்கும் பரவியது. அதனைக்கேட்ட சிப்பாய்கள் அத்தகைய படைக் கலங்களைத் தொடவும் மறுத்தனர். பிறகு அவ்வழக்கம் மாற்றப்பட்டு விட்டது. என்றாலும் முதலிலேயே புகைந்து கொண்டிருந்த கலகத் தீ அதனால் அதிகமாகப் புகைந்து சில நாட்களில் வெளிப்பட்டு எரியத் தொடங்கியது.

கலகம் முதலில் வங்காளத்தில் தோன்றியது. அது பிறகு டில்லிக்கு அருகில் உள்ள மீரத்தில் மூண்டது. இவ்வாறு கலகம் கான்பூர், லக்னோ முதலிய பல இடங்களில் பரவிவிட்டது.

பல இடங்களில் கொலையும், கொள்ளையும் நிகழ்ந்தன. பொதுமக்கள் பலர் என்ன நடக்குமோ என்று அஞ்சினர். இவ்வாறாக இந்திய தேசத்தின் இடைப் பகுதியிலும், வட பகுதியிலும் சிப்பாய்க் கலகம் மூண்டெழுந்துவிட்டது. ஆங்கிலரது நாடுசேர்க்கும் முறையாலும், ஆட்சிமுறையாலும் அவர்களை வெறுத்துவந்த சுதேச அரசர்கள் கலகக்காரர்களைத் தட்டி எழுப்பினர். சிலர் மறைமுகமாக உதவினர். சிலர் வெளிப்படையாகக் கலந்து போர் செய்யத் தொடங்கினர். அப்பொழுதுதான் இராணி இலக்குமிபாய் வெளிப்படையாக எதிர்த்து நின்று போர் செய்தாள். தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள விஞ்சி நின்றாள்.

# 5. ஜான்ஸியில் போர்

சிப்பாய்க் கலகம் மூண்டுவிட்டது. இந்திய வீரர்கள் பொங்கி எழுந்தனர். கலகம் காட்டுத் தீயைப் போல் எங்கும் பரவியதை யாம் முன்னரே பார்த்தோம். ஜான்ஸியில் அத்தீ கொழுந்துவிட்டு எரிந்தது. இராணி அன்னியரை அழிக்க உறுதி பூண்டாள்; படைகளைத் திரட்டினாள்; குதிரை வீரர்கள் குதூகலத்துடன் எழுந்தனர். இலக்குமிபாய் தன் படைகளுக்குத் தலைமை தாங்கினாள். அவளது சிறந்த குதிரை தன் தலைவியைச் சுமந்து செல்லும் பேறு தனக்குக் கிடைத்ததே என்றும், விடுதலைப் போரில் தனக்கும் பங்கு கிடைத்ததே என்றும் பெருமகிழ்ச்சி கொண்டு கனைத்தது. இலக்குமிபாய் தனது நாட்டைக் காப்பதே தனது தலைசிறந்த கடமை என்ற உறுதி பூண்டாள்; தனது உடம்பில் உயிர் உள்ள வரையில் போர் செய்வது என்று முடிவு கொண்டாள். ‘எனது ஜான்ஸி எனக்கே உரியது. இதனைப் பிடித்துக்கொள்ள யாருக்கும் உரிமையில்லை. யாராலும் பிடித்துக் கொள்ளவும் முடியாது’ என்று வீரமொழி புகன்றாள். வீரர்கள் மனத்தில் புதிய ஊக்கமும் வீரமும் தோன்றின.

ஜான்ஸியில் தோன்றிய கலகத் தீயை அணைக்க ஸர். ஹியூரோஸ் என்ற பெரும் படைத் தலைவர் பெரிய படையுடன் வந்தார். அவர் இராணியின் வீரத்தைக் கேள்வியுற்ற வுடன் நடுங்கிவிட்டார். எனினும் பெரும் படையுடன் வந்ததால் தைரியத்தைக் கைவிட வில்லை. 1858-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ஆம் தேதி பகைவர்கள் ஜான்ஸியின் அருகில் வந்து விட்டனர். பகைவர்களுக்கு ஹைதராபாத், போபால் சிற்றரசர்களும் துணை செய்தனர். பகைவர்கள் ஜான்ஸியை வளைத்தனர்.

ஜான்ஸி இராணி பகைவர்க்கு அஞ்சு வாளோ? இத்தகைய போரை அவள் எதிர் பார்த்துத்தானே காத்திருந்தாள்? பகைவர்கள் நெருங்கா வண்ணம் தடுக்கப் பல முறைகளைக் கையாண்டாள். அவளது நகரத்தைச் சுற்றிய விளைநிலங்கள் யாவும் அழிக்கப்பட்டன. பகை வர் எளிதில் வந்து தங்காவண்ணம் அந்நகரத் தின் சுற்றுப்புறங்கள் எல்லாம் வெறுந் தரை யாக்கப்பட்டன. பகைவர்களுக்கு இது பெரிய வியப்பைக் கொடுத்தது. அவர்களுக்கு அங்கு எவ்விதமான உணவுப்பொருளும் கிடைக்க வில்லை, வெயிலுக்கு ஒதுங்கக்கூட நிழல் இல்லை.

என்ருலும் ஜான்ஸியைப் பிடிப்பதிலேயே பகைவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்தனர். ஒரு காரியத்திலேயே கருத்துக் கொண்டிருப் பவர்கள் உடல் வருத்தங்களேப் பார்ப்பார் களோ? தூங்குவார்களோ? பிறருடைய அவமதிப்பைத்தான் பாராட்டுவார்களோ? எனவே பகைவர்கள் ஜான்ஸி நகருக்கு மிக அருகில் வந்து விட்டனர்.

அரசியின் பக்கத்தில் குதிரைப் படை யினர் பலர் இருந்தது உண்மையே. அரிய வீரர்கள் சிலரும் இருந்தனர். ஆனல் வீரர் களில் பலர் புதியவர்களாக இருந்தனர். அவர் கள் மனத்தில் வீரவுணர்ச்சி மிகுதியாக இருந் தது. எனினும் படைக்கலங்களே ஏவுவதில் அவர்கள் அதிகப் பயிற்சியைப் பெறவில்லே. இலக்குமிபாயே அவர்களுக்குப் போர் செய்யும் முறைகளேக் கற்பித்தாள். போருக்கு உரிய ஒழுங்குமுறைகள் பலருக்குத் தெரியாது. இலக்குமிபாய் அவர்களுக்கு எல்லாவற்றையும் போதித்தாள். அப்பொழுது அரசிக்கு ஓய்வே இல்லே. ஓய்வு எப்படித்தான் எடுத்துக்கொள்ள முடியும்? நாட்டிற்குத் தீங்கு வந்திருக்கும் பொழுது ஓய்வு ஏது? அவள் அங்கும் இங்கும் சென்று படை வீரர்களுக்குப் பலவிதக் கட்

டளைகளை இட்டாள்; உற்சாகத்தை ஊட்டி ஞள். அவ்வூர்க் கோயில்களில் அரசி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை கள் நடந்தன.

நாடுமுழுவதும் போரில் ஊக்கம் காட்டி யது. துப்பாக்கிகளின் ஒலியும், பீரங்கிகளின் முழக்கமும் எங்கும் கேட்டன. வீரர்கள் விடாது எதிர்த்து நின்று பகைவரைத் தடுத் தனர். இத்தகைய வீரப் போர் நிகழ்ந்ததால் பகைவர்களால் எளிதில் ஜான்ஸியைப் பிடிக்க முடியவில்லை. இவ்வாறு போர் ஒன்பது நாட் கள் நடந்தது. இவ்வாறன நிலையில் அரசி தன் இளம்பருவத்து நண்பர்களான நாஞசாகிபு விற்கும், தாந்தியா தோபிக்கும் ஓலை விடுத் தாள். விரைவில் வந்து துணைபுரியும்படி அவ் வோலையில் எழுதப்பட்டிருந்தது. நாஞசாகி பினல் உடனே வரமுடியவில்லை. தாந்தியா தோபி ஒரு படையுடன் விரைந்து வந்தார்.

தனது இளமைக்கால நண்பரான தாந் தியா தோபியைப் பார்த்தவுடன் அரசி மிக மகிழ்ச்சி கொண்டாள். அவளுக்கு வீரம் விஞ்சி யது. நண்பர்கள் இருவரும் சேர்ந்து பகை வரைத் தாக்க முடிவு செய்தனர். இவ் விருவரும் ஒன்றுசேர்ந்ததை உணர்ந்த பகை

வர் அஞ்சினர்; தாம் தோல்வியுறுவது திண்ணம் என்று எண்ணினர். என்றாலும் பகைவர்கள் போர் செய்வதை விடவில்லை. தோற்பதைக்காட்டிலும் இறப்பதே மேல் என்று எண்ணிப் பாய்ந்தனர். பீரங்கிகள் நெருப்பைக் கக்கின. போரில் ஆங்கிலேயரே வெற்றிபெற்றனர். தாந்தியா தோபியின் வீரர்கள் அச்சங் கொண்டனர். தமக்குத் துணையாக வந்த படைகளின் அச்சத்தைக் கண்ட ஜான்ஸி வீரர்களும் ஊக்கம் குன்றினர்.

அந்நிலையில் இராணி யாது செய்தாள்? தளர்ந்த தன் வீரர்களை ஒன்று கூட்டினாள். மனத்தை உருக்கும் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினாள். அவள் வீரர்களை நோக்கி, 'வீரர்களே! மக்களுக்கு வேண்டுவது மானம் அல்லவா? நமது நாட்டிற்கு வரும் அவமானம் நம்முடையதல்லவா? கவரிமான் தனது ஒரு உரோமத்தை இழந்தாலும் உயிரை விடும் அன்றோ! பெரியோர்களும் தமது மானம் போகும் நிலை வந்துவிட்டால் உயிரை விடுவர். இன்று நமக்கு அத்தகைய நிலையே வந்திருக்கிறது. நமது அரிய நாடு பகைவர்களிடம் அகப்பட்டு விடும்போல் உள்ளது. இந்நிலையில் நாம் நமது வீரத்தைக் காட்டப் பின்வாங்க

லாமோ? பிறந்தோர் இறப்பது புதுமை யல்லவே! "ஆறிலும் சாவு நூறிலும் சாவு" என்று பெரியோர்கள் கூறியுள்ளார்களே! போரில் இறந்தால் விண்ணுலகம் அடைய லாம். தேவர்கள் நம்மைத் தம் விருந்தினராக ஏற்றுக்கொள்வார்கள். இந்தியதேசத்தில் இனி எக்காலத்திலும் நமது பெயர் அழியாது நிலை நிற்க வேண்டுமேயானால், நமது பின்னோர்கள் நம்மைத் தங்களுடைய வாழ்க்கைக்கு உதாரண மாகக் கொள்ளவேண்டும் என்று நீங்கள் விரும் புவீர்களேயானால் கிளம்புங்கள்; ஏறுங்கள் குதிரைகளில்; சுழற்றுங்கள் வாள்களை; நாட் டின் பொருட்டு உயிரைக் கொடுத்த வீரர்கள் என்று புகழ்மாலை சூட்டிக்கொள்ளுங்கள். உங்கள் உடம்பில் வீர இரத்தம் பாய்கின்றது அல்லவா? உங்களுடைய இரத்தம் கொதிக்க வில்லையா? எழுங்கள், எழுங்கள்' என்று பெரிய வீரச் சொற்பொழிவு நிகழ்த்தினாள்.

இராணியின் பேச்சு, தளர்ந்த வீரர்களைத் தட்டி எழுப்பியது. சோர்ந்த மனங்களைத் தளிர்க்கச் செய்தது. வீரர்கள் பெருமிதத் துடன் போருக்கு எழுந்தனர். ஒடுங்கிய வீரர்கள் போர் விருப்பங்கொண்டு பகை வரை எதிர்த்தனர். அங்கரின் கீழைக்

கோட்டை வாயிலில் நின்ற பகைவர்கள் பலர் வெட்டுண்டனர். ஜான்ஸி வீரரின் வீரப்போருக்கு முன்னால் பகைவர்களால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவர்கள் பறந்தனர். அரசிக்குக் கீழைக்கோட்டை வாயிலில் வெற்றி கிடைத்தது. ஆயின் அந் நகரின் தெற்குவாயிலைக் காத்துநின்ற வீரர்கள் சிலர் பகைவரின் ஆசை வார்த்தைகளில் மயங்கிவிட்டனர். இராணிக்குத் துரோகம் செய்தனர். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது பழமொழியன்றோ? அவ் வீரர்கள் தமது உயிரினும் இனிய இராணி யைப் பகைவரிடம் காட்டிக்கொடுக்க இணங் கினர். என்ன ஆச்சரியம்! அழிகின்ற பொரு ளின்மேல் கொண்ட ஆசையால் அழியாத பெரும் பழியை அவர்கள் சுமந்தனர். அவர்க ளுடைய ஆசையைப் பயன்படுத்திக்கொண்டு பகைவர்கள் நகருள் நுழைந்தனர்.

இராணியின் வீரர்க்கும், பகைவர்க்கும் கைகலந்த போர் மூண்டுவிட்டது. தெருக் களில் போர்! வீடுகளில் போர்! எங்கும் பிணங்கள் குவிந்தன. குதிரைகள் கணக்கின்றி வெட்டப்பட்டுக் கிடந்தன. வீரர்கள் மலர்ந்த முகத்துடன், ஆனால் வீரம் வெளிப்படும் முகத்

துடன் விழுந்து கிடந்தனர். அவர்கள் உயிரைக் கொடுத்தது எதற்கு? தம் நாட்டைக் காக்கும் பொருட்டு. எங்கும் பிண நாற்றம். நகரம் எரிந்தது. இராணியின் உயிரினும் இனிய நகரம் எரிந்தது! அவள் இருந்து அரசாண்ட அரியணை பகைவர் வசமாகியது.

பாழான நகரத்தைப் பார்த்துப் பதைத்து நின்றாள் இராணி. அக்கோட்டையின் மேல் அவள் நின்றுகொண்டிருந்தாள். அவளது உடல் நடுங்கியது; உள்ளம் வெந்தது; மார்பகம் வெடித்துவிடும்போல் இருந்தது; அவள் தனது உடம்பில் படும் புண்களைப் பொருட்படுத்த மாட்டாள். உயிரைவிட அவள் அஞ்சவில்லை. தனது உயிரினும் இனிய நகரத்துக்கு வரும் தீங்கை அவளால் பொறுக்க முடியவில்லை. அவளது கலங்கிய நிலையைக்கண்ட வீரர்களும் கலங்கி நின்றனர். அவர்கள் செய்வது ஒன்றும் அறியாது திகைத்துச் செயலற்று நின்றனர். அதுபொழுது வேறொரு துக்கச் செய்தி அவளுக்குக் கிடைத்தது. அவளது அரிய நண்பர்களும், உயிர்போன்றவர்களும், வீரர்களுமான சர்தார் குதாபக்ஷும், குலாம் கௌஸும் போரில் மாண்டனர் என்பதே அச்செய்தியாகும். இடிக்குமேல் இடி!

துக்கத்திற்கு ஒரு எல்லேயுண்டு. துன்பத்திற்கும் ஒரு வரம்பு உண்டு. இராணி யாது செய்வாள்? வீரர்களே நோக்கினுள். பேச நினைத்தாள். தொண்டை கம்மியது. தலேவியான தானே தளர்ந்தால் ஏனைய வீரர்கள் யாது செய்வர் என்ற எண்ணம் அவளுக்கு உண்டாயிற்று. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். அவள் மனம் கல்லாகிவிட்டது. தன் வீரர்களே நோக்கி அவள், "வீரர்களே! நமது நாடு பட்ட பரிபாவத்தைப் பார்த்தீர்களா?" என்ருள். அனைவரும் வாளா இருந்தனர். இராணி மீண்டும், "நண்பர்களே! நான் இறப்புக்கு அஞ்சவில்லே. எனது உயிர் நீங்கும் பொழுதும் சில பகைவர்களே வெட்டி வீழ்த்தியே இறப்பேன். யானே பெண். யான் இறந்த பிறகு எனது உடலேப் பகைவர்கள் இழிவுபடுத்துவரே! என் செய்வது?" என்ருள். வீரர்களின் இரத்தம் கொதித்தது. அவர்கள் ஒரே குரலில், "இராணியே! அப்படி நடக்க நாங்கள் யாரும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். எங்கள் உடலில் நல்ல இரத்தம் பாய்கின்றது. தங்களால் மூட்டிவிடப்பட்ட வீரத் தீ எங்கள் மனத்தில் எக்காலத்திலும் அவியாது," என்றனர்.

இராணி சில வீரர்களைப் பொறுக்கி எடுத்தாள்; நகரை விட்டு அவர்களுடன் வேறிடம் செல்ல முடிவு செய்தாள்; தனது நட்பரசர்களின் உதவியைப் பெற விரும்பினுள்; அவ்வழியாகப் பகைவரை வெல்ல நினைத்தாள். அன்று இரவே இராணி பொறுக்கி எடுக்கப்பட்ட வீரர்களுடன் நாட்டை விட்டு வெளிச் செல்ல ஏற்பாடு ஆயிற்று. நாட்டை விடுத்து வேறிடம் செல்ல இராணிக்கு மனம் இல்லை. எனினும் என் செய்வது? அந்த வழியைத் தவிர வேறு வழி இல்லை. வேறிடம் செல்லத் தான் வேண்டும்.

எனவே இராணி ஆணுடை உடுத்தாள். குதிரையில் ஏறினுள். அவளை நிழல் போல் பிரியாது நின்ற குதிரைவீரர்கள் தம் இராணியைப் பின் தொடர்ந்தனர். குதிரைகள் பறந்தன. இராணி ஏறியிருந்த குதிரையின்மேல் ஒரு சிறுவனும் இருந்தான். அவன் யார்? பச்சிளம் பாலகன்! போரினைக் கண்ட அவன் நடுக்கத்துடன் இருந்தான். அவனுக்கு அஃது ஓர் புதுமையாகவும் இருந்தது. அவன் வேறு யாருமில்லை; தாமோதரன் என்னும் பாலகனே. ஜான்ஸி அரசன் மரணப் படுக்கையில் கிடந்தபொழுது அவனல் தத்து எடுத்துக்

கொள்ளப்பட்டவன்; ஜான்ஸியின் பட்டத்திற்கு உரிய இளவரசன் என்று அந்நாட்டு மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவன். ஆனால், ஆங்கிலேயரால் ஒப்புக்கொள்ளப்படாதவன். இத்தகைய இளைஞனும் இராணியும் ஒரு குதிரையின்மேல் ஏறியிருந்தனர். குதிரைகள் காற்றினும் கடுகிச் சென்றன.

எங்கும் பேரிருள். குதிரைகள் நகரத்தின் வடக்கு வாயில் வழியாகச் சென்றன. வாயிற் காவலன் அவர்களைத் தடுத்தான். இராணி தனது குரலை மாற்றி "நாங்கள் ஸர். ஹயூ ரோஸுக்குத் துணைபுரியச் செல்கின்றோம்" என்றாள். வாயிற்காவலன் அதனை உண்மை என்று நம்பி அவர்களைச் செல்ல விடுத்தான். துன்பக்காலத்திலும் சிறிது இன்பம்! இராணியின் முகத்தில் சிறிது புன்னகை மின்னலைப் போல் தோன்றி மறைந்தது. இராணி சிலருடன் முன்னே விரைவாகச் சென்றாள். ஏனைய குதிரைவீரர்கள் பின் சென்றனர். வழியில் பல இடங்களில் பகைவர்கள் அவர்களைத் தடுத்தனர். இராணி ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு விதமாகத் தப்பினாள். ஆனால், பின் வந்த குதிரைவீரர்கள் பகைவர்களால் தடுக்கப்பட்டுவிட்டனர், எனவே அரசியும்,

சில குதிரைவீரர்களுமே நகரத்தை விட்டு வெளிச்செல்ல முடிந்தது. மனத்தினும் விரைவாகக் குதிரைகள் சென்றன. அதன்பின் யாது நிகழ்ந்தது? அதனை அடுத்து வரும் பகுதிகளில் பார்ப்போம்.

145962

# 6. துணைவலியும் போரும்

இராணியின் குதிரை விரைந்து சென்றது. அதனால் எழுந்த புழுதி வானத்தை மறைத்தது. ஆ! அக்குதிரைக்குத்தான் எவ்வளவு அறிவு! தனது தலைவியைச் சிறைப்பிடிக்க ஆங்கிலப் படைத்தலைவர், போக்கர், காற்றினும் கடுகிப் பின்பற்றி வருவதை அப்பரி எவ்வாறு அறிந்தது? வியப்பிலும் வியப்பு! விலங்குகளைக் காட்டிலும் மனிதன் சிறந்தவன் என்று உலகோர் கூறுவர். மனிதனுக்கு, இவ் விலங்குகளுக்கு இல்லாத பகுத்தறிவு இருக்கின்றது என்றுதான் அவ்வாறு மனிதன் உயர்த்திக் கூறப்படுகிறான். பகுத்தறிவு என்பது யாது? நல்லனவற்றையும், தீயனவற்றையும் பிரித்து அறியும் அறிவன்றோ? இராணியின் நாட்டில் சில வீரர்கள் பகைவர்களுடன் சேர்ந்தனர். அவள் காலத்துச் சுதேச அரசர்களில் சிலரும் பகைவர்களுடன் சேர்ந்தனர். இராணி இலக்குமிபாய் எதற்காகப் போர் செய்கிறாள் என்பதையும், அவளது நோக்கம் யாது என்பதையும் அவ்வாறு பகைவர்களுடன் சேர்ந்தவர்களால் அறிய முடியவில்லை. இராணியின் சிறந்த கொள்கையைப் பகுத்தறிவு படைத்த அவர்களால்

TB
O-.6(6)

பாராட்ட முடியவில்லை. ஆயினும் பகுத்தறிவு இல்லாதது என்று விலக்கப்பட்ட விலங்காகிய குதிரை அவளது கொள்கையை ஆதரித்தது. இராணியினது உயிரைக் காட்டிலும் தமது உயிரே சிறந்ததென்று அவர்கள் கருதினர்! ஆனால் இராணியின் குதிரை அவ்வாறு நினைக்க வில்லை! அது தன் உயிரைக் கொடுத்தேனும் இராணியைப் பாதுகாவலான இடத்தில் சேர்க்க நினைத்தது. என்னே வியப்பு!

குதிரையின்மேல் சென்ற இராணி எந் நிலையில் இருந்தாள்? அவள் தனது ஜான்ஸி நாடு எரிக்கப்பட்டதை நினைத்து வருந்து வாளா? தன் குடிகள் பகைவர் ஆட்சியில் எப் பாடு படுவாரோ என்று ஏங்குவாளா? தன் னைச் சிறைப்பிடிக்கப் பின்பற்றி வருகின்ற தளகர்த்தர், போக்கரை, எப்படி மாற்றுவது என்று சிந்திப்பாளா? தன்னுடன் கூட வரும் இளைஞனாகிய தாமோதரனின் நிலையை உன்னு வாளா? யாது செய்வாள்? இருபத்திரண்டு வயதுகூட நிரம்பாத இளநங்கையால் என்ன செய்ய முடியும்? ஏன் செய்ய முடியாது? என் னென்ன செய்ய இயலுமோ அவ்வளவையும் செய்தாள். அந்நிலையில் யார் இருந்தாலும் என்ன செய்வாரோ அதைக்காட்டிலும் அதிக

மாகவே அவள் செய்தாள். ஜான்ஸி நாடு எரிந்ததை அவள் மறந்தாள். தன் குடிகளைப் பற்றியும் மறந்தாள். ஏன்? தன் பக்கத்தில் பதைத்த உள்ளத்துடன் நடுங்கிக்கொண்டு தன்னை இறுகத் தழுவி இருந்த பாலகனையும் மறந்தாள்? அவளது நினைவு முழுவதும் 'எப்படிப் பகைவரை அழிப்பது? பழிக்குப் பழி வாங்குவது? தனது நண்பராகிய பீஷ்வாவை எப்பொழுது பார்ப்பது? அவரது நகரமாகிய கல்பியை எப்பொழுது சேர்வது? எவ்வாறு துணைப்படைகளை அடைவது? தனது நண்பர்களை எப்படிக் கூட்டுவது?' என்பவற்றைப் பற்றிச் சிந்திப்பதிலேயே ஆழ்ந்திருந்தது. இந்நிலையில் அவள் குதிரையின்மேல் சென்றாள். அவளுக்கு உதவியாகப் பத்துப் பதினைந்து குதிரை வீரர்களே சென்றனர்.

அவ்வளவில் பொழுது புலர்ந்தது. இராணி களைப்பு அடையவே இல்லை. உடல் களைத்தது உண்மையே. ஆனால் அவளது மனம்? அது களைக்குமோ? அது இரும்பினும் வலியது அன்றோ! அந்த இரும்பு மனம் அன்பர்களிடமே குழையும். பகைவர்களைக் கண்டு உருகாது. பகைவர்களைக் கண்டால் மேலும் வலி

மையை அடையும். அவளது குதிரை களைத்ததோ? வியப்பு! வியப்பு! பெரு வியப்பு! அதன் முகத்தில் களைப்புக் குறியே காணப்படவில்லை. இராணியும் அவளது துணைவர்களும் இடைவழியில் ஒரு சிற்றூரில் சிறிது தங்கி உணவுகொண்டு, காலம் தாழ்த்தாது கல்பி நகரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

இராணியைச் சிறைப்பிடிக்க வந்த ஆங்கிலப் படைத் தலைவர் போக்கர், அருகில் நெருங்கிவிட்டார். 'இன்னும் சிறிது காலம் தான்; அரசி பிடிபட்டுவிடுவாள்' என்று அப் படைத் தலைவர் நினைத்தார். ஆயிற்று; இன்னும் சில அடிகளே இரு பகுதியினர்க்கும் இடையில் உள்ளன; பார்த்தாள் இராணி. பரியைத் திருப்பினாள்! படைத்தலைவர், போக்கரை நோக்கிப் பாய்ந்தாள். இத்தகைய பாய்ச்சலைப் போக்கர் எதிர்பார்க்கவில்லை; சற்றே திகைத்தார். கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளாக மின்னல் மின்னியதுபோல் அவளது வாள் போக்கரின் உடம்பை வெட்டியது. அவரது உடம்பிலிருந்த இரும்புச் சட்டையின் உதவியால் அவர் இரு துண்டங்களாகவில்லை. என்றாலும் போக்கர் குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டார். அவருக்குத் துணையாக

வந்த வீரர்கள் பலர் மடிந்தனர். சிலர் படுகாய முற்றனர். அவ்வளவில் இராணி தன் குதிரையைத் தூண்டினுள். பகைவரை வென்ற மகிழ்ச்சியுடன் அப்பரி பாய்ந்து சென்றது. இறவாது பிழைத்திருந்த துணைவர்களும் அவளைப் பின்பற்றினர். கீழே விழுந்த போக்கரும் ஏனையோரும், 'தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று எண்ணி அவளை மேலும் பின் தொடர்ந்து செல்லாது திரும்பினர்.

காலை, நடுப் பகல், மாலை; இராணி ஏறி இருந்த குதிரை நிற்கவில்லை. இராணியும் குதிரையை விடுத்து நகரவில்லை. இரவும் வந்தது. இராணியின் குதிரை ஓடிக் கொண்டே இருந்தது. இராணியை நிழல் போல் தொடர்ந்து வந்த சில குதிரை வீரர்களும் இராணியின் குதிரையைப் பின்பற்றினர். எங்கும் பேரிருள். இவ்வாறு நிகழ்ந்த வீர ஓட்டம் நடு இரவில் நின்றது. இராணி முதலியோர் கல்பி நகரம் சேர்ந்தனர். இருபத்து நான்கு மணி நேரத்திற்கு அதிகமாகத் தொடர்ந்து ஓடிய குதிரை நின்றது! நின்றது தான் தாமதம்; குதிரை கீழே சாய்ந்தது. அக் குதிரை பகுத்தறிவுள்ளது என்று முன்னரே குறிப்பிட்டோமன்றோ? தனது தலைவி பாது

காவலான இடத்தை அடைந்ததைக் கண்ட அக்குதிரை மிக மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும்! தனது கடமையைச் செய்து முடித்ததாக அவ்விலங்கு கருதியது போலும்! அக்குதிரை நடுவழியிலேயே இறந்திருக்கவேண் டும். ஆயின் அது தன் கடமையை முடிக்கவே உயிர்தாங்கி இருந்தது என்று கொள்வது பொருந்தும். கீழே சாய்ந்த குதிரை மண் ணுலக வாழ்வை நீத்தது. அதனுடைய உடலே அழிந்தது என்று சொல்லவேண்டும். அதன் பெயர் பொன்னெழுத்துக்களால் இந்திய சரித்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது உண்மை. நாட்டின் விடுதலைக்கு வீரத்துடன் போர் செய்த அரசியைப் பாதுகாவலான இடத்திற் சேர்த்த பெருமை அப்பரியையே சார்ந்தது. தனது உயிரினும் இனிய குதிரை வீழ்ந்து இறந்ததைக் கண்ட இராணி மிக வருந்தினள். உற்றார் உறவினர் இறந்த காலத் திலும், உயிர்க்கணவன் இறந்த காலத்திலும், அடைந்த துயரத்தைக் காட்டிலும் அவள் அப்பொழுது அதிகத் துயரத்தை அடைந் தாள் என்றே சொல்லவேண்டும்.

கல்பி நகரத்தில் இராணி இலக்குமிபாய் பீஷ்வாவைக் கண்டாள்; நிகழ்ந்ததை உரைத்

தாள்; தன் குல முன்னோர்களின் நட்பை எடுத்துரைத்தாள்; பகைவரை வென்றே ஆகவேண்டும் என்பதை அவரது மனத்தில் பதித்தாள்; அவரது துணையை வேண்டினாள். பீஷ்வாவும் ஒப்புக்கொண்டார். இனம் இனத்தையே சேரும் அன்றோ! அரசி தனது கொள்கையை நன்கு உணர்ந்த நண்பரைச் சேர்ந்தாள். பீஷ்வாவின் படைகளைக்கொண்டு பகைவருடன் போர் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

பீஷ்வாவினிடம் பெரும்படை இருந்தது. எனினும் அது சரியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. படைவீரர்கள் ஒரு கட்டுப்பாடான முறையில் நடந்துகொள்வதை அறியவில்லை. இப்படையுடன் இராணி கஞ்ச்கான் என்ற இடத்தில் பகைவரை எதிர்த்தாள். அவள் போர்த் தந்திரங்களை நன்கு அறிந்தவள். ஆதலின் நடுப்பகலிலேயே பகைவருடன் போர் தொடுத்தாள். நடுப்பகலில் கதிரவனின் வெம்மை மிகுதியால் குளிர் தேசத்தவர்களாகிய பகைவர் துன்பத்தை அடைவர் என்பதும், அவர்கள் முழு வலிமையுடன் போர் செய்ய முடியாது என்பதும் அவளது நினைவு ஆகும். அவள் நினைத்தவாறே, பகைவர் வெப்பத்தைப் பொறுக்கமுடியாது தவித்தனர்.

என்றாலும் பகைவரே வென்றனர். எனவே, இராணி பீஷ்வாவின் படையுடன் பின்வாங்கினாள். அது மிக ஒழுங்காக நடைபெற்றது. அதை நேரில் கண்ட ஒருவர் அந்நிகழ்ச்சியைப் புகழ்கின்றார். கலகக்காரர்கள் பின்வாங்கிய முறை சிறந்ததொன்றாக இருந்தது. படையிடம் அவசரம் காணப்படவில்லை. ஒழுங்கீனமும் இல்லை. விரைவும் இல்லை. அந்தப் படை இரண்டு மைல் நீளம் இருந்தும் அப்படையின் நடுவில் ஒழுங்கு நிலவியது. முதல் வரிசையில் நின்ற வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளால் சுட்டவுடன் அவர்கள் பின்புறமாக ஓடி மறு வரிசை சுடுவதற்கு இடம் கொடுத்தனர். இப்படியாக மற்றொரு வரிசையும் முறைப்படியே சுட்டு, ஒன்றன்பின் ஒன்றாக ஓடிச் சென்று நின்று, மறுபடியும் துப்பாக்கிகளில் வெடிமருந்துகளைத் திணித்தது. இத்தகைய முறை வியக்கத் தக்கதாகும். இதுவே அப்பாராட்டுதற்குறியதாகும்.

பீஷ்வா தனது படை தோற்றதற்கு வருந்தினார். 'படையினர்க்குப் பயிற்சியும், கட்டுப்பாடும் போதிய அளவில் இல்லாமையினாலேயே தாங்கள் தோற்குமாறு நேரிட்டது' என்றுகூறி இலக்குமிபாய் பீஷ்வாவைத்

தேற்றினள். பீஷ்வாவிற்கு ஊக்கம் உண்டா யிற்று. இலக்குமிபாய் சொல்லின் செல்வி ஆவாள். அவளுக்குச் சொல்வன்மை இல்லை என்றால் அவ்வளவு இளவயதில் அவள் தன் வீரர்களைக்கொண்டு போர் புரிந்திருக்க முடி யுமோ? வீரர்கள்தான் கட்டுப்பட்டிருப்பார் களோ? அவள் சொற்படி கேட்டிருப்பார் களோ? மறுபடியும் படை திரட்டப்பட் டது. போர் தொடங்கியது.

போர் மிகக் கடுமையாக நடந்தது. ஆனல் பீஷ்வா பின்வாங்கத் தொடங்கினர். இராணி பெண்புலி போல் பாய்ந்தாள். அவளது குதிரை விரைந்து நாற்புறங்களிலும் சென் றது. அவள் சென்றவிடமெல்லாம் பிணக் குவியல். அவளைப் பின்பற்றிச் சென்றால் தமக்கு வேண்டிய உணவு கிடைக்குமென்று பருந்துகள் அவளைப் பின்தொடர்ந்தே சென் றன. அவள் விழித்த கண் இமைக்கவில்லை. இருபத்திரண்டே வயது நிரம்பிய பெண்! அவளது வீரப் போரைக் கண்ட ஏனைய வீரர்கள் தம்மை மறந்தனர். போர் சொல்ல முடியாத அளவில் கடுமை ஆயிற்று.

பகைவர் நடுங்கினர்; செய்வதை அறி யாது தவித்தனர்; கூற்றுவனே பெண்ணுரு

வம் கொண்டு போர் செய்கின்றனே என்று எண்ணினர். இராணியின் எதிரில் செல்ல அனைவரும் அஞ்சினர். அவர்களுடன் வந்திருந்த ஒட்டகங்கள் அவர்கள் உயிரைக் காத்தன. அவை இராணியின் வீரர்கள் செல்ல இடையூருக இடை வழியில் நின்றன. அவை குறுக்கே நிற்கவில்லை என்றால் வெற்றி நம் இராணிக்கே கிடைத்திருக்கும். என் செய்வது? பகைவர்கள் பக்கமே வெற்றி கிடைத்தது. கல்பியும் பகைவரிடம் சிக்கியது. ஆயின் இராணி முதலியவர்கள் பகைவர்களிடமிருந்து தப்பி வேறிடம் சென்றனர்.

# 7. தாந்தியா தோபியும் அரசியும்

இராணியின் இளம்பருவத்துத் தோழர்களில் ஒருவர் தாந்தியா தோபி. அவர் மராத்திய அரச பரம்பரையைச் சேர்ந்தவர். அவர் நாஞ சாகிபுவிற்கு மெய்க்காவலராக இருந்தார். வீரமும், தந்திரமும் ஒருங்கு நிறைந்தவர்; நாட்டுப் பற்று மிக்கவர்; நண்பர்களின் பொருட்டு உயிரையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவர்; சிறிய பதவியிலிருந்து பெரும் போர்வீரரானவர்; சோம்பல் இல்லாதவர்; மனவலிமை மிக்கவர்; எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பவர்; ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது உடல் வருத்தத்தைப் பார்க்கமாட்டார்; பிறகு அவமதிப்பையும் பொருட்படுத்தமாட்டார். அத்தகைய மாபெரும் வீரர், சிப்பாய்க் கலகத்தில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்.

ஜான்ஸியில் போர் நடந்த காலத்தில் உதவிக்கு வரும்படி இலக்குமிபாய் இவருக்குக் கடிதம் எழுதியதை முன்னரே குறிப்பிட்டோம். தனது உடன் பிறந்த தங்கைபோன்ற இராணிக்கு உதவி செய்வதற்காகத் தாந்தியா

தோபி விரைந்து சென்றார். அவரிடம் அப்பொழுது மிகப் பெரும்படை இருந்தது. எனினும் அவரது படைவீரர்கள்பீதியடைந்து விட்டனர். தாந்தியா தோபி தோல்வியடைய நேரிட்டது. அவரிடம் இருந்த துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும் பகைவரிடம் அகப்பட்டுக் கொண்டன. தாந்தியா தோபி செய்வகை அறியாது பின்வாங்க நேர்ந்தது.

இராணி ஜான்ஸியைப் பறிகொடுத்து கல்பி நாடு வந்தபின் தாந்தியா தோபி இராணியுடன் சேர்ந்தார்; கஞ்ச்கான் போரில் இராணிக்கு உதவினார். கடு வெயிலில் பகைவர்கள் கலங்கிப் போர் செய்ய முடியாது தவித்த பொழுது தாந்தியா தோபி அவர்களை மேலும் துன்புறுத்தினார். இவ்வளவு செய்தும் பயன் என்ன? வெற்றி பகைவர் பக்கத்திலேயே இருந்தது. அவர் பின்வாங்க நேரிட்டது. என் செய்வது? இயந்திர பலத்திற்குமுன் மனிதர்கள் பலம் என்ன செய்யமுடியும்? தாந்தியா தோபி பகைவர்கள் கையில் அகப்படாமல் தப்பி ஓடிவிட்டார். எங்குச் சென்றார் என்பதைப் பகைவர்களால் அறியமுடியவில்லை. தாந்தியா தோபி அவ்விடத்திலிருந்து விரைந்து சென்று பல இடங்களில் கலகத் தலைவர்களைக்

கண்டு பேசினர்; அவர்களுடைய வாக்குறுதிகளைப் பெற்ருர்; குவாலியரின் நிலைமையை அறிந்து திரும்பினர்.

இவ்வாறு படைகளைச் சேர்த்த பின்னர் இராணியும், தாந்தியா தோபியும் பீஷ்வாவுடன் சேர்ந்து குவாலியரை நோக்கிச் சென்றனர். குவாலியர் அப்பொழுது ஒரு வலிய பாதுகாவலான இடமாக இருந்தது. அங்கு அரசாண்டு வந்தவர் சிந்தியா என்பவராவார். சிந்தியா இவர்களுடன் சேர்ந்திருப்பாரேயாஞல் சிப்பாய்க் கலகத்தின் போக்கே மாறி இருக்கும். ஆனல் சிந்தியா தனது துணையை நாடி வந்தவர்களின்மீது போர் தொடுத்தார்; அரசர் போர் தொடுத்தால் என்ன? அவர் படையினர் யாவரும் தம் உணர்ச்சியை இழந்துவிட்டார்களோ? அவர்கள் எல்லோரும் போர் செய்ய மறுத்தனர். எனவே சிந்தியா தனது குவாலியரை விடுத்து உயிர் தப்பி ஓடிவிட்டார். தாந்தியா தோபியும், இராணியும், பீஷ்வாவும் மகிழ்ச்சியுடன் அந்நாளைக் கொண்டாடினர்.

தாந்தியா தோபி இந்தக் கொண்டாட்டங்களில் அதிகமாக மனத்தைச் செலுத்தவில்லை.

பகைவர்கள் குவாலியரில் தங்களை எதிர்ப் பார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்தவாறே ஸர். ஹியூரோஸ் பெரும் படையுடன் குவாலியரை நோக்கி வந்தார்; வளைத்துக்கொண்டார்; பகைவர்களுடன் சிந் தியாவும் வந்திருந்தார். பகைவர்கள் அவரை யும் தம்முடன் அழைத்து வந்ததன் நோக்கம் யாது? அதுதான் அவர்களுடைய தந்திர மாகும். குவாலியரின் பொதுமக்களை ஏமாற்று வதற்கே அவர்கள் அத்தந்திரம் செய்தனர். குவாலியரின் அரசருக்காகத் தாங்கள் போர் செய்வதாகவும், குவாலியரைப் பகைவர்களிட மிருந்து விடுவிக்கத் தாங்கள் உதவி செய்வ தாகவும் கூறினர். எனவே தாந்தியா தோபி எவ்வளவு முயற்சி செய்தும் அவற்றால் மிகுதி யான பயன் உண்டாவதற்கு வழியில்லாமல் போய்விட்டது.

இதுபொழுது இராணி இலக்குமிபாய் எங்கிலையில் இருந்தாள்? அவள் தனித்திருந் தாள். அவள் மனம் பலவற்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தது. உலகத்தில் தோன்றிய யாவும் ஒரு நாள் அழிந்தே தீரும் என்னும் உண்மையை அவள் நன்கு அறிந்திருந்தாள். 'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்

முடிவில் ஒருபிடி சாம்பராய் வெந்து மண்ணு வர்' என்ற உண்மை அவளுக்கு நன்கு தெரியும். உலக இன்பத்தை அவள் விரும்பவில்லை. அவளுக்கு விருப்பம் ஒன்றேதான். அது தன் உயிருள்ளவரையில் பகைவர்களுடன் போர் செய்யவேண்டும் என்பதே. அவள் விரும்பிய வாறே செய்தாள்.

## 8. அரசியின் வீர மறைவு

இராணி இறுதிப் போர் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. தாந்தியா தோபி தன் பக்கத்தில் இருந்தது, இராணிக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. தனது தேசத்தவ ராகிய சிந்தியா பகைவருடன் வந்திருப்பது கண்டு மனம் பதைத்தாள். பகைவரது போர்த் தந்திரத்தைக் கண்டு அவளது சினம் எல்லையைக் கடந்தது; பீஷ்வாவோ செய்வகை அறியாது அங்கும் இங்கும் சென்றவாறு இருந்தார். இராணி இறுதிப் போர் புரிய முந்தினாள்; தன் வீரர்களைத் திரட்டினாள்.

அவ்வமயம் வீரர்களை நோக்கி இராணி, "வீரர்களே! இப்பொழுது நாம் நம் பகைவர் களுடன் முடிவாகப் போர் செய்யும் சமயம் வந்துவிட்டது. உங்கள் உயிரைச் சிறிதும் பொருட்படுத்தாமல் போர் செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. உங்கள் முழு வலிமையைக் காட்டச் சந்தர்ப்பம் இதுதான். ஒரே முடிவு வைத்துக்கொள்ளுங்கள். பகைவர் நமது நாட்டில் இல்லாத விதம் செய்ய முய லுங்கள்; ஓடுமாறு செய்யுங்கள். இல்லையேல்

போரில் உயிரை விடுங்கள். எவ்வளவு நாட்கள் ஓடி ஓடி ஒளிந்து போர் செய்வது? இன்று நீங்கள் செய்யும் போரை உங்களுடைய மக்களும், சந்ததியார்களும் கதைகளைப் போல் படித்துப் புகழ்வார்கள். இந்திய சரித்திரம் உங்கள் வீரச் செயலுக்கு முன்னிடம் கொடுத்து உங்களுக்கு உயர்வளிக்கும். விடுதலைக்குப் போர் செய்த வீரர்களின் வரிசையில் நீங்கள் முதலில் வைத்து எண்ணப்படுவீர்கள். நாம் நாட்டை இழந்தோம். உற்றுரை இழந்தோம். உறவினரை இழந்தோம். நம்முடையவை என்று சொல்லத்தக்கது ஒன்றுதான் இவ்வுலகில் இருக்கிறது. அது நமது வீர வாளே யாகும். நமது அரிய குதிரைகளும் உள்ளன. நீங்கள் பாரத வீரர்கள் என்பதை உலகம் முழுவதும் அறியும் வண்ணம் செய்யுங்கள். உங்கள் உடலில் வீர, சுதந்தர இரத்தம் ஓடுகிறது என்பதை உலகினர்க்குக் காட்டுங்கள். உங்கள் சுதந்தர தாகம் எப்படிப்பட்டது என்பதைப் பகைவர்கள் நன்கு உணரும்படிச் செய்யுங்கள். எழுங்கள்! ஏறுங்கள் குதிரைகளில்! விழித்த கண்ணை இமைப்பதும் கூடாது. பகைவரைப் படுகொலை செய்யுங்கள்,'' என்று உணர்ச்சியுடன் பேசினுள்.

இராணி வேட்டைமேல் செல்லும் பெண் புலி போல்போர் விருப்பத்துடன் எழுந்தாள். ஆ! அவளது கையில் உள்ளது யாது? அவளது வாள்! அது வாளோ? அன்று, அன்று. கூற்றுவன்! ஆலகாலவிடம்! அதனது ஒளியே பகைவர்கட்கு அச்சத்தை உண்டாக்கியது. அவளது புரவி? அஃதொன்றே அவளுக்குப் பெரு வருத்தத்தை உண்டாக்கியது. அவளது உயிரினும் இனிய குதிரை முன்னரே இறந்துவிட்டது. இதுபொழுது வேறொரு குதிரையின் மேல் ஏறி இருந்தாள். அது வலிமை வாய்ந்ததே. பகைவர்களைக் கண்டு அஞ்சும் தன்மை அதற்கு இல்லை. என்றாலும் இராணிக்கு அது புதியது அல்லவா? இராணியின் மன உணர்ச்சியை அக்குதிரை முற்றிலும் அறிந்து கொள்ளவில்லை. அதைப்பற்றிச் சிந்தித்து முடியுமோ? இராணி அதனைப் பொருட்படுத்தவில்லை. 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழியன்றோ! இராணி அக்குதிரையின் மேல் தாவினாள்.

இராணிக்கு உதவியாக இரு பெண்டிரும் உடன் சென்றனர். அவர்கள் ஆணுடைகளில் இருந்தனர்; அரசியின் வாழ்விலும் தாழ்விலும் பங்கு எடுத்துக் கொண்டனர். இன்பக்

காலத்தில் உடனிருந்த அவர்கள், துன்பக் காலத்தில் அவளை விட்டுப் பிரியவில்லை. இன்பம் உள்ள காலத்தில் கூட இருந்து மகிழ்ந்து, துன்பம் வந்த காலத்தில் நண்பரை விட்டுப் பிரிதல் கீழோர் இயற்கை அல்லவா ? அவ்விரு பெண்டிரும் மிக உயர்ந்தோர் என்று அழைப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்கள். அவர்களும் இராணியின் பக்கத்தில் கையில் பிடித்த வாள்களுடன் குதிரைகளின்மேல் இருந்தனர்.

இராணியினிடம் அப்பொழுது ஒரு பெரும் படை இருந்திருந்தால் என்ன முடிவு ஆகியிருக்கும்? அதைப்பற்றிச் சொல்லிப் பயன் என்ன? "நெப்போலியன் வாடர்லூப் போரில் வென்றிருந்தால்?" என்று ஆங்கிலத்தில் ஒரு கட்டுரை உள்ளது. அதன் ஆசிரியர் அவ்வாறு நெப்போலியன் வென்றிருந்தால் ஐரோப்பாவின் நிலைமையே மாறியிருக்கும் என்று மிகவும் அழகாக எழுதியுள்ளார். அதனைப் போல் இராணியினிடம் பெரும் படை இருந்திருந்தால் சிப்பாய்க் கலகத்தின் போக்கே மாறி இருக்கும். எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும். நடவாததைக் குறித்து ஆராய்வதில் பயன் இல்லை.

இராணியின் வீர எழுச்சியைக் கண்ட பகைவர் மனம் மறுகினர். எதிர்த்து வந்த ஸ்மித் என்ற படைத்தலைவர் அவளை நெருங்கவும் அஞ்சினர்; எனினும் போர் செய்தார்; சிறிது நேரத்தில் போர் செய்வதால் பயன் இல்லை என்று கண்டு திரும்பினர்; இராணியின் வீரத்தைப் பலபடத் தம் அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. அன்று அம்மாதத்தின் பதினெட்டாவது நாள். அதை இந்திய சரித்திரத்திலேயே முக்கியமான நாள் என்று கூறலாம். இந்தியர்கள் அனைவரும் அந்நாளை நினைவில் வைக்க வேண்டும். அன்று ஸர். ஹியூரோஸ் எவ்வாறேனும் இராணியைக் கொல்லவேண்டும் என்று முடிவு செய்தார்; பெரும் படையுடன் வந்தார். பகைவர்கள் அருகில் நெருங்கி விட்டார்கள்.

இராணியின் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. ஆ! அப்புன்னகையில்தான் எவ்வளவு பொருள் அடங்கியுள்ளது. அது வீரப் புன்னகை அல்லவா? தன் வீரர்கள் தன்னைப் பின்பற்ற அவள் பகைவர் படையில் புகுந்தாள். அதைக் கண்ணால் கண்ட ஒருவர், 'அழகிய இராணி பகைவர் படையில் புகுந்தாள்.

அவள் இல்லாத இடம் இல்லை. அவளது படை குலைக்கப்பட்டது உண்மையே. ஆனால் இராணி எல்லோருக்கும் முதலில் நின்றாள். தனது படை நிலைகுலைந்ததைக் கண்டு அவள் மனம் சிறிதும் அஞ்சியதாகவோ பதைத்த தாகவோ தெரியவில்லை. அந்நிலையிலும் அவள் வீரத்துடன் போர் செய்தாள்' என்று கூறு கின்றார்.

பகைவர்கள் நாற்றிசைகளிலும் வந்து இராணியைச் சூழ்ந்துகொண்டனர். இராணி யின் அருகில் பத்துப் பன்னிரண்டு குதிரை வீரர் களே இருந்தனர். அவளது இரண்டு பெண் துணைவர்களும் அருகில் இருந்தனர். தன்னைச் சூழ்ந்துகொண்ட பகைவர்களைப் பிளந்து கொண்டு இராணி அப்பால் செல்ல வேண்டும். அவளை நோக்கிப் பல துப்பாக்கிக் குண்டுகள் பறந்து வந்தன. அவள் ஓரிடத்தில் நின்றால் தானே அவை அவள் மேல் படும்? எப்படியோ இராணி பகைவர்களின் அணிவரிசையைப் பிளந்துகொண்டு சென்றாள். அப்பொழுது அவளது பெண் நண்பர்களில் ஒருத்தி கொல்லப்பட்டாள். அவளை வானுலகுக்கு அனுப்பிய வீரனின் உடலை இராணியின் வாள் அக்கணமே இரண்டு துண்டுகளாக்கியது.

இராணியின் புரவி அப்பால் ஓடியது. பகைவர்கள் பின் தொடர்ந்தனர்.

ஆனல் இடைவெளியில் ஒரு சிற்ருேடை குறுக்கிட்டது. ஒரே தாண்டல்தான். அவ்வோடையை அவ்வாறு தாண்டியிருந்தால் இராணி பிழைத்திருப்பாள். ஆனல் அந்தோ! அது என்ன! குதிரை மலைக்கின்றதே! சுற்றிச் சுற்றி வருகின்றதே! சிற்ருேடையைத் தாண்ட அஞ்சுகின்றதே! அவளது பழைய குதிரையாக இருந்தால் அவ்வாறு நிற்குமோ? என் செய்வது! விதியினை விலக்க யாரால் முடியும்? பகைவர்கள் மிக அருகில் வந்தனர். அரசி பணிந்தாளோ? அல்ல, அல்ல. பணிதல் என்பது அவளுடைய அகராதியிலேயே இல்லை. திரும்பினுள் அரசி. அதன் பயனுகப் பல பகைவர்கள் வானுலகு ஏகினர். பின்பக்கத்திலிருந்து ஒரு பகைவன் அவளது தலையில் வாளால் வெட்டினுன். மற்ருெரு வெட்டு வலப்புறமாக விழுந்தது. அந்தோ! விடுதலைக்குப் போர் செய்த வீரப் பெண்மணி வெட்டுண்டாளே! என்னே கொடுமை!

இராணியின் அருகில் இராமச்சந்திரராவ் தேஷ்முக் என்ற ஒருவர் இருந்தார். அவர் இராணியினிடம் உள்ளன்புடன் பணிவிடை

செய்து வந்தவராவர். அவர் வெட்டுண்ட இராணியைத் தாங்கி எடுத்துச் சென்ருர். பக்கத்தில் இருந்த ஒரு குடிசையை அடைந் தார். அங்கு, கங்காதரன் என்பவர் ஒரு சிறு குவளையில் நீரை எடுத்து அவளது வாயில் ஊற்றினர். இராணிக்கு மரண தாகம். ஒரு வாய் நீரைக் குடித்தாள் இராணி. அவளது உயிர் அகன்றது. அவ்வளவில் அவளது பூத வுடம்பு ஈமத் தீயில் ஏற்றப்பட்டது. அவ்வீர மங்கையின் உடலைத் தீ தழுவித் தன்னுடன் சேர்த்துக்கொண்டது.

பகைவர்கள் இராணியின் உடலைத் தேடி னர். இராணி தீயுடன் கலந்ததை அவர்கள் அறிவார்களோ? தான் இறந்த பிறகு தனது உடலைப் பகைவர்கள் எடுத்துப் பழி வரும் செயலைப் புரிவார்களோ என்பதே இராணியின் பேரச்சம். ஆனல் அவளது உண்மையுள்ள நண்பர்கள் அதற்கு இடங் கொடுக்கவில்லை. அவளது குற்றமற்ற உடலைத் தீயில் இட்டுப் பொசுக்கிவிட்டனர். எனவே இராணி, உயிர் உள்ள பொழுதும் பகைவரால் தீண்டப்பட வில்லை. உயிர் நீங்கிய பிறகும் பகைவரால் தீண் டப்படவில்லை. இவ்வாறு வீர இராணி மறைந் தாள். இவ்வீர இராணியை ஆங்கிலப் படைத்

தலைவராகிய ஸர். ஹியூரோஸ், "கலகக் காரர்களில் இராணி இலக்குமிபாயே பெருந் துணிவும், அஞ்சாநெஞ்சமும், சிறப்பும் வாய்ந் தவள்," என்று புகழ்ந்தார்.

குவாலியர் பகைவர்களிடம் சிக்கியது. தாந்தியா தோபி ஓடிவிட்டார். எனினும் அவருக்கு அடைக்கலம் அளித்திருந்தவர் இறுதியில் அவரைப் பகைவர்களிடம் காட்டிக் கொடுத்துவிட்டார். அவருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. தூக்குமரத்துக் கயிற்றில் தலையை இடும்பொழுது அவர் சிறி தும் அஞ்சவில்லை. தான் ஒரு பெரு வீரன் என் பதை அவர் அனைவருக்கும் வெளிப்படுத்தி னார். அவர் வீரம் விளங்கும் முகத்துடன் தூக்குமரத்தில் தொங்கினார்.

## 9. அரசியின் நல்லியல்புகள்

இலக்குமிபாய் அன்புக்கு இருப்பிடம்; அருட்கடல்; குணக் குன்று; அழகுத் தெய்வம்; வீர இலக்குமி; ஏழைகளிடத்தில் இளகிய மனம் படைத்தவள்; பகைவரிடத்தில் பாறை போன்ற மனம் கொண்டவள்; வறியவர்களைக் கண்டு வாடினாள்; நோயாளிகளைக் கண்டு கரைந்தாள்; வீரர்களை ஊக்கப்படுத்தினாள்; அன்னியர் படையைக் கண்டு சீறினாள்; நாட்டினிடத்து நல்லன்பு கொண்டாள்; காலையில் எழுந்தாள்; கடவுளைத் துதித்தாள்; ஏழைகளோடு உண்டாள்; எளியவர்களை ஆதரித்தாள். இத்தகைய மங்கை நல்லாள் நாட்டின் பொருட்டுத் தனது நல்லுயிரை வீரத்துடன் நல்கினாள். அப்பொழுது அவளுக்கு வயது இருபத்திரண்டே நிரம்பி யிருந்தது. மக்களுக்கு இயற்கையாக உள்ள வாழ்நாளில் மூன்றில் ஒரு பங்கைக்கூட அவள் பெறவில்லை. இன்பங்களை அனுபவிக்கின்ற இள வயதில் இறந்தாள்! இச் செய்தி நமக்கு வரம்பில்லாத வருத்தத்தை உண்டாக்குகின்றது. எனினும் அவளது வீரத்தன்மை நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்குகின்றது; வீரத்தை ஊட்டுகின்றது; தளர்ந்த நம் மனத்தில்

வீரத்தைத் தட்டி எழுப்புகின்றது; சோர்ந்த மனத்தைத் தளிர்க்கச் செய்கின்றது. இலக்குமி பாய் இறந்தால் என்ன? அவளது உடல்தானே அழிந்தது. புகழும் அழிந்துவிட்டதோ? அவள் மூட்டிய வீரத்தீ அணையுமோ? ஒரு நாளும் அணையாது. அவளது நினைவு நம் மனத்தை விட்டு எக்காலத்திலும் அகலாது. இத்தகைய வீரப்பெண் நம்மைச் சேர்ந்த ஓர் இந்தியப் பெண் என்று நினைக்கும்பொழுது நமக்கு எல்லையில்லாத இன்பமும், பெருமிதமும் உண்டாகின்றன.

## பயிற்சி வினாக்கள்

1. பழந்தமிழ் நாட்டில் பெண்டிரும் ஆட வரைப் போலவே வீரம் மிகுந்து விளங் கினர் என்பதைச் சான்றுகொண்டு விளக்குக.
2. இராணியின் தாய் தந்தையர் யார்?
3. இராணி இலக்குமிபாயின் இயற்பெயர் என்ன?
4. இலக்குமிபாயின் இளமைப் பருவத்தை பதினைந்து வரிகளில் விளக்குக.
5. பீஷ்வா நானாசாகிப் யார்? அவர் எப் பொழுது தோன்றினார்?
6. பாஜிராவ் பீஷ்வா யார்?
7. இலக்குமிபாயின் இளமை ஆசிரியர் யார்?
8. இலக்குமிபாயின் கணவன் யார்?
9. ஜான்ஸி நாடு எந்த சாம்ராச்சியத்தைச் சேர்ந்திருந்தது?
10. கங்காதர ராவின் ஆட்சியில் ஜான்ஸி நாடு எவ்வாறு இருந்தது?
11. கங்காதர ராவ் யாரை தத்து எடுத்துக் கொண்டார்?

12. கங்காதர ராவ் இறக்கும்போது இலக்குமி பாயிடம் என்ன கூறினுர் ?

13. இலக்குமிபாயின் ஆட்சியை விளக்குக.

14. இராணியிடம் என்னென்ன வகைப் படைகள் இருந்தன ?

15. சிப்பாய்க் கலகம் ஏற்படக் காரணம் என்ன ?

16. இராணி சிப்பாய்க் கலகத்தில் கலந்து கொள்ளக் காரணம் என்ன ?

17. கலகம் முதன் முதலில் எங்குத் தோன் றியது ?

18. ஜான்ஸி இராணி பகைவர் நெருங்கா வண்ணம் தடுக்கக் கையாண்ட முறைகள் யாவை ?

19. தளர்ந்த வீரர்களை ஊக்குதற்பொருட்டு ஜான்ஸி இராணி கூறிய வீர மொழிகள் யாவை ?

20. இராணிக்கு ஏற்பட்ட 'இடிக்குமேல் இடி' யாது ?

21. இராணி வடக்கு வாயில் காவலனிடம் என்ன கூறித் தப்பித்துக்கொண்டாள் ?

22. போக்கர் என்பவர் யார் ? அவர் இராணி யைப் பின் தொடர்ந்து என்ன பாடுபட் டார் ?

23. பகுத்தறிவு படைத்த மனிதனைக் காட்டிலும் இராணியின் குதிரை மேலானது என்பதை எப்படி அக்குதிரை காட்டியது?

24. இராணியின் போர்த் திறத்தைச் சுருக்கி வரைக.

25. இராணி கல்பி நாட்டை எவ்வாறு அடைந்தாள் ?

26. கஞ்ச்கான் யுத்தத்தை விளக்குக.

27. குவாலியர் சண்டையைப் பற்றிப் பத்து வரிகளில் எழுதுக.

28. இராணியின் கடைசிக் காலம் எப்படியிருந்தது ?

29. இராணி எங்ஙனம் பகைவரால் கொல்லப்பட்டாள்?

30. இராணியின் நல்லியல்புகளை விளக்கிக் கூறுக.

TB
O-,6(6)
N60
145962

649
~~3·4·65~~/-
380

